# தீபகச் சுடர்

மார்ச் 2024

தீபம் 12 சுடர் 10

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# உயிர்த்து உயிர்கொடுப்போம்

# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



***அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,***

உங்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் விழா நல்வாழ்த்துக்களும் செபங்களும்.

இந்தியத் திருநாட்டில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கவிருக்கும் இந்நாட்களில் பலர் தங்களுடைய எதிர்காலத்தை நினைத்து கவலைப்பட்டு கொண்டு இருக்கின்றார்கள். என்ன நடக்குமோ? நாம் துன்புறுத்தப்படுவோமோ? நாடுகடத்தப்படுவோமோ? உரிமைகளை இழப்போமோ? அதிலும் குறிப்பாக நாம் மதம், இனம், மொழி, சாதி எனப் பிரிக்கப்பட்டு அழிக்கப்படுவோமோ? என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அனைவருக்கும் இந்த உயிர்ப்பின் பெருவிழா அர்த்தமுள்ளதாகின்றது. இயேசுவின் "உயிர்ப்பு" நமக்கு உண்மையான "விடுதலை" ஒன்று உண்டு என்ற எதிர்நோக்குடன் காத்திருக்கச் செய்கின்றது. சாவைப்போன்று ஒரு பெரும் துன்பம் இவ்வுலகில் இல்லை. ஆனால் இயேசு "சாவை வென்றுவிட்டார்." நாமும் பாவம் என்ற சாவை ஒருநாள் முழுமையாக வெல்வோம், நித்திய வாழ்வில் பங்கு பெறுவோம் என்பதை இவ்விழா நமக்கு அறிவுறுத்துகிறது.

இயேசுவின் உயிர்ப்பு இருளிலிருந்து பேரொளிக்கு நம்மை வழிநடத்திச் செல்கிறது. கல்லறை இருளிலிருந்து மூன்றாம் நாள் பேரொளியின் வாழ்வுக்கு இயேசு நம்மை அழைக்கின்றார். எனவே நாமும் கிறிஸ்துவில் இறந்து, உயிர்த்து, பாவம் என்ற இருளை ஒழித்து, நித்திய வாழ்வு என்னும் பேரொளியில் வாழ்வோம் என்ற எதிர்நோக்கை இவ்விழா நமக்கு கற்றுத் தருகிறது. இயேசுவின் உயிர்ப்பில் பங்கு பெறும் திருமுழுக்குப் பெற்ற நம் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவரின் வல்லமையுண்டு. இந்த மாபெரும் வல்லமையால் இவ்வுலகை நாம் வெல்ல முடியும். உலகில் நாம் காணும் வெறுப்பு, பகைமை, பிரித்தாளுதல், போட்டி, பொறாமை, கொலை, கொள்ளை மற்றும் எல்லாவிதமான தீமைகளையும் வென்று நன்மை, அன்பு, ஒற்றுமை, உறவு, வாழ்வு, மகிழ்ச்சி, பேரின்பம் என உயிர்ப்பின் மக்களாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கின்றது.

உயிர்ப்பைக் கொண்டாடும் நாம் இவ்வுலக சவால்களை நேரடியாக சந்திக்கவும், உண்மையை உலகிற்கு எடுத்துரைக்கவும், எதிரிகளைக்கண்டு அஞ்சாமல் நம்பிக்கை அறிக்கையிடவும், நம்மை அழைக்கின்றது. எனவே உயிர்த்த ஆண்டவரின் வல்லமையோடு நாம் எல்லாவிதமான தீய சக்திகளை எதிர்த்து போராடவும், வெற்றிக் கொள்ளவும், அன்பு, அமைதி, உண்மை, நீதி, நேர்மை இவைகள் யாவும் உயிர்ப்பின் கொடைகள் எனவும், அதை உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கைக்கொள்வோர், இவ்வுலகில் இறுதிநாள்வரை போராடி வெற்றி பெறுவர். நாம் உயிர்ப்பின் மக்கள் எனவும், மகிழ்ச்சியின் மக்கள் எனவும், வெற்றியின் மக்கள் எனவும் எந்த நிலையிலும் வெற்றிபெறுகிறோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் தொடர்ந்து வாழ்வோம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | |
|---|---|
| 03.03.2023 தவக்காலம் மூன்றாம் ஞாயிறு - திருப்பலி | 02 |
| 07.03.2023 புனித பெர்பெத்துவா மற்றும் பெலிசித்தா - திருப்பலி | 03 |
| 10.03.2023 தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு - திருப்பலி | 04 |
| 17.03.2024 தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி | 06 |
| 19.03.2024 புனித யோசேப்பு கன்னிமரியாவின் கணவர் பெருவிழா - திருப்பலி | 07 |
| 23.03.2024 புனித மாங்க்ரோவேகோ துரீபியுஸ் - திருப்பலி | 09 |
| 24.03.2024 ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு - திருப்பலி | 10 |
| 31.03.2023 உயிர்ப்பு ஞாயிறு (காலை) | 11 |


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| சிலுவைப் பாதை: உறவு செரிந்த குடும்பங்களும் காலணிகளும் | 12 |
| புனித வாரம் நம்மைப் புனிதமாக்கும் வாரம் | 24 |
| திருஅவைச் செய்திகள் | 27 |

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 03.03.2023 தவக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. வி.ப. 20: 1-17 II. 1கொரி. 1: 22-25 லூக். 2: 13-25

இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கைக்கொண்ட இறைச்சமூகமே, இன்று திருஅவையானது தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு நம்மை அழைத்திருக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் ஆண்டவர் கொடுத்த கட்டளைகளைப் படிக்கின்றோம். முதல் மூன்று கட்டளைகள் நம்மைப் படைத்து பராமரித்துவரும் ஆண்டவரை வழிபட அழைக்கிறது. நான்காவது கட்டளை பெற்றோர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறது. ஐந்து முதல் எட்டு கட்டளைகள் மற்றவர்களை புண்படுத்தாதபடி வாழ அழைக்கிறது. கடைசி இரண்டு கட்டளைகள் நமக்கு அடுத்திருப்பவர்களின் உரிமைகளை மதித்து பாதுகாத்திட அறிவுறுத்துகிறது. இரண்டாம் வாசகத்தில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் நற்செய்தி யூதர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் இடறலாக இருந்தது. அவர்கள் எதிர்ப்பார்த்த மெசியா உரோமையர்களின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பார் என்று நினைத்தனர். ஆனால் இங்கு இயேசு சிலுவையில் அறையுண்டதை யூதர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். உலகின் பார்வையில் சிலுவை துன்பத்தின் அடையாளமாகத் தெரிகிறது. நாமும் யூதர்களைப்போல சிலுவையை வீட்டில் வைக்கத் தயங்குகிறோம்.

இன்றைய நற்செய்தியில் இயேசு கோயிலை தூய்மைப்படுத்துவதைப் பார்க்கிறோம். ஆடு, மாடு, புறா விற்பவர்கள், நாணயம் மாற்றுபவர்கள் கோயிலுக்குள் இருந்தனர். இறைவனை வழிபட வந்தவர்கள் கோயிலுக்கு வெளியே இருந்தனர். இந்தச் செயலை ஆண்டவர் கண்டு அவர்களை கோவிலிருந்து விரட்டிவிட்டார். ஆண்டவர் நமக்கு கற்பிப்பது என்னவென்றால் நாம் அனைவரும் தூய ஆவியின் ஆலயம், நாம் அனைவரும் தூய்மையாக இருக்க வேண்டும். இங்கு கோவிலை மட்டுமல்ல, ஆன்மீக வாழ்வின் இருளையும் தூய்மைப்படுத்த ஆண்டவர் விரும்புகிறார். துன்பம் என்னும் சிலுவையை சுமந்து சிலுவைவழி சிகரத்தைத் தொட்ட இயேசுவை பின்தொடர்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மனித உள்ளத்தில் இருப்பதை அறிந்திருக்கும் ஆண்டவரே, எம் திருஅவையின் பணியாளர்கள் பங்குப்பணிகளில் ஆர்வமுடன் பங்கேற்று, ஆன்மீகத்தில் அக்கறைக்கொண்டு வாழவும் உள்ளம் எனும் ஆலயத்தை இறைப்பிரசன்னம் தங்கும் இடமாக்க புதிய ஆன்மீக எழுப்புதலை கொண்டு வர வேண்டிய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு ஆண்டவரிடம் வாருங்கள் என்று கூறிய இறைவா, தவக்கால பக்தி முயற்சிகளில் ஆர்வமாக ஈடுபட்டுள்ள நாங்கள் அனைவரும் உணவு மற்றும் உடைகளில் மட்டும் மாற்றத்தைத் தேடாமல் உடல், உள்ளம், மற்றும் செயல்பாடுகள் சார்ந்த மாற்றத்தினை எங்கள் குடும்பங்களில் கொண்டுவர வரமருள ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. என்மீது அன்பு கூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கு பேரன்பு காட்டுவேன் என்று கூறிய இறைவா, உடன்படிக்கையின் அடையாளமாக எமக்கு கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளின் வழியில் எம் வாழ்வைச் செம்மைப்படுத்தி உமது மேலான அன்புக்கட்டளையின்படி ஒருவரையொருவர் அன்பு செய்து வாழும் வரமருள ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. புதுவாழ்வு வழங்கும் அன்புத் தந்தாய், குடிவெறி, சாதிப்பாகுபாடு, நுகர்வு வெறி, வரதட்சணை, ஊழல் போன்ற சமூக நோயால் சிக்கிச் சீரழிந்து வரும் எம் சமூகத்தை கண்ணோக்கும். இந்தக் கொடிய நோய்கள் ஒழிந்து வளமான புதிய சமூகம் படைக்க ஏதுவான உள்ளொளியை எங்களுக்கு அருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

## 07.03.2023 புனித பெர்பெத்துவா மற்றும் பெலிசித்தா திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

இன்று நாம் கி.பி. 181 (2ம் நூற்றாண்டு)ஆண்டில் பிறந்து கி.பி. (3ம் நூற்றாண்டு) 203ல் மரித்த மறைசாட்சிகளான புனித பெர்பேத்துவா மற்றும் பெலிசித்தா ஆகியோரின் திருநாளைக் கொண்டாடுகின்றோம். இறைவன்மீது முழு நம்பிக்கைக்கொண்டு வாழ்ந்த இவர்கள் உயர்குடியில் பிறந்து வளர்ந்தவர்கள். புனித பெர்பேத்துவா தனது 22வது வயதில் திருமணம் முடித்து பச்சிளம் குழந்தையின் தயானார். இவரோடு மறைசாட்சியாக மரித்த பெலிசித்தா கருவுற்றிருந்தார். இவர்கள் இருவரும் சேவேருளின் ஆட்சியில் மறைசாட்சிகளாக கொல்லப்பட்டனர். கத்தோலிக்க திருஅவையில் திருப்பலியில் பெயர் குறிப்பிடப்படும் புனிதர்களுள் இவர்களும் அடங்குவர்.

புனித பெர்பேத்துவா 203ல் நடந்த வேத கலாபனையின்போது தான் கொல்லப்படுவது உறுதி எனத் தெரிந்து கிறிஸ்தவத்தினை தழுவினார். இவரைப் போன்றே இவரது சகோதரரும் மனம் மாறினார். இதனால் தந்தையின் கோபத்திற்கு ஆளாகி கைது செய்யப்பட்டனர். சிறையிலடைக்கப்படுவதற்கு முன் இவர் திருமுழுக்குப் பெற்றார். பெலிசித்தா (நிறைமாத கர்ப்பிணி) குழந்தையோடு சாகவிரும்பாமல்

கடவுளிடம் வேண்டி அந்த இரவே பெலிசித்தா குழந்தையைப் பெற்றெடுத்தார். கிறிஸ்தவ மறையினை கைவிட மறுத்ததால் இருவரையும் மிருகங்களுக்கு இறையாக்கினார். திருஅவைக்காக உயிர்விட்ட இந்த புனிதர்கள் கருவுற்ற தாய்மார்கள், கால்நடை வளர்ப்பவர், பண்ணையாட்கள், கசாப்புக் கடைக்காரர்கள் ஆகியோரின் பாதுகாவலராக இருக்கிறார்கள். திருஅவைக்காக தன் உயிரையும் பொருட்படுத்தாமல் மறைசாட்சிகளான எத்தனையோ புனிதர்கள் வாழ்ந்த பூமியில் நாமும் வாழ்கிறோம். இந்த தவக்கால நாட்களிலே இருக்கும் நாம் இறைவனுக்காக சிலமணித் துளிகளையாவது செலவழிப்போம். புனிதர்களின் வழியில் நடக்க முயற்சி செய்து, இருப்பதைப் பகிர்ந்து, இல்லாவிட்டாலும் அன்பைப் பகிர்வோம், தொடர்ந்து திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் எம் இறைவா, ஆயன் தன் ஆடுகளை மேய்ப்பதுபோல, எங்களை வழிநடத்தும் எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் தங்கள் பணியைச் செய்வதில் ஏற்படும் பிரச்சனைகளையும், இடையூறுகளையும் நீக்கி அவர்களது பணியை எந்த தடையும் இல்லாமல் செய்து முடிக்க நீர் வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் அரசரே எம் இறைவா, நாட்டுத் தலைவர்களை வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற நல்ல தலைவர்கள் பதவி வகித்து மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மைகளைச் செய்யக்கூடிய நல்லுள்ளம் கொண்டவர்களை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இந்த கல்வி ஆண்டில் பொதுத்தேர்வு எழுதயிருக்கும் மாணவ மாணவிகளை நீர் ஆசீர்வதித்து அவர்கள் எழுதும் தேர்வினை நல்ல ஞானத்தோடும், அறிவுக் கூர்மையோடும், நினைவாற்றலோடும் தேர்வினை எழுதக்கூடிய வல்லமையையும், ஆற்றலையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 10.03.2024 தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. 2குறி. 36:14-16, 19-23 II. எபே. 2: 4-10 யோவா. 3: 14-21

இறையரசுப் பணியில் அன்புள்ள சகோர சகோதரிகளே, இன்று தாயாம் திருஅவை தவக்காலத்தின் நான்காம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றது. நற்செய்தியாளர் யோவான் அடிக்கடி பயன்படுத்தும் இரு சொற்கள்: 1. வாழ்வு, 2. ஒளி இவை இரண்டும் சக்தி வாய்ந்ததனால் ஒளியில் வாழ்வதற்குத் தவம் தடம் பதிக்கத் தயார் செய்கிறது. எனவே, இவ்விரு பெரும் சக்தியை அகம் சுமந்திட அறைகூவல் விடுக்கின்றது இத்தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு.

**1. வாழ்வு:** "ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்ற இயேசுவின் பணிஇலக்கு இன்று நிக்கதேமுக்கும் இயேசுவால் உணர்த்தப்படுகிறது. இயேசுவை நம்பும் எவரும் அவரைப்போல வாழ்வு வழங்கும் சக்தியாகத் திகழ வழிகாட்டுகிறது இத்தவக்காலம்.

**2. ஒளி:** ஒளி வாழ்வையும், இருள் சாவையும் குறிக்கும் அடையாளங்கள். படைப்பின் தொடக்கமுதல் இவை இரண்டிற்குமிடையே ஓயாப் போராட்டம் தொடர்கிறது. எனவேதான் இயேசு "நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்" எனவும், "உலகின் ஒளி நானே" (யோவா. 8:12) என்றும் கூறினார். தன்னை ஒளி என மொழிந்த இயேசு தன்னுயிரை ஈர்ந்து உலகு ஒளிரச் செய்தார். கடவுளுக்கு எதிராகப் பேசினார் இஸ்ரயேல் மக்கள். அவர்களைத் தண்டிப்பதற்காக நஞ்சு கக்கும் பாம்புகளை அனுப்பினார் இறைவன். தங்கள் பாவத்தை உணர்ந்தவர்களாய் மோசேயிடம் "எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினார்.

இஸ்ரயேல் மக்கள் அப்போது வெண்கலப்பாம்பு ஒன்றைச் செய்து கோலில் பொருத்தி அதை உயர்த்துகிறார் மோசே. "இந்த வெண்கலப் பாம்மைப் பார்ப்பவர் உயிர் பிழைப்பார்" என்கிறார். அந்தப் பாம்மைப் பார்த்தவர்கள் உயிர் பிழைத்தனர். இங்கே மக்களைக் காப்பாற்றியது வெண்கலப் பாம்பின் உருவமல்ல, மாறாக மோசே வழியாக வந்த இறைவார்த்தையைக் கேட்டு, அந்தப் பாம்மைப் பார்த்தால் நான் பிழைப்பேன் என்ற நம்பிக்கைதான். இதைத்தான் பவுல் "நம்பிக்கையின் வழியாக மீட்கப் பட்டிருக்கிறீர்கள்" என்று முதல் வாசகத்தில் குறிப்பிடுகிறார். நாம் ஒளியாக வாழ்கிறோமா? அல்லது இருளில் வாழ்கிறோமா? சிந்தித்து, இன்றைய தெய்வீகத் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அனைத்தையும் ஆண்டு நடத்தும் இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் மக்களோடு கலந்து தன்னலமற்ற உள்ளத்தோடு பணிபுரியும் வேளையில் ஏற்படுகின்ற அசம்பாவிதங்களை தவிர்த்து உமக்கேற்ற பாதையில் வழிநடந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மகிழ்ச்சியின் காரணரே எம் இறைவா, எங்கள் வாழ்வில் பலவிதமான சோதனைகள் சங்கடங்கள் ஏற்பட்டாலும், எழுச்சியுடன் உமது கரம்பற்றி கொண்டு, பாவ வாழ்வில் வீழ்ந்துவிடாமல் உம்மோடு வாழ்வில் என்றும் மகிழ்வுடன் வாழ வேண்டிய அருளைத்தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற இறைவா, நாம்

ஆண்டவரின் குரலைக் கேட்டு ஏழை எளிய மக்களுக்கு நம்மால் இயன்ற உதவிகள் செய்து வாழ நல்மனதையும், பொருளுதவியும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பு இறைவா, கொடையாக எங்களுக்கு நீர் அளித்துள்ள வாழ்வை நாங்கள் ஏற்றுக்கொண்டு வாழவும், நீர் காட்டிய இரக்கத்தை மக்களின் நன்மைக்காகவும், நலனுக்காகவும் நாங்கள் செயல்பட வேண்டிய நல்மனதை எங்களுக்குப் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.03.2024 தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. எரே. 31: 31-34 II. எபேசி. 5: 7-9 யோவா. 12: 20-33

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். "கடவுளே, தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே வைத்தருளும்" முதல் வாசகமான எரேமியா இறைவாக்கினர் எடுத்துரைக்கும் செய்தியில் ஆண்டவர் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் செய்துக்கொண்ட உடன்படிக்கையில் மீறப்பட்டபோதும், என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதித்தும், அவர்களின் தீச்செயலை மன்னித்தும், அவர்தம் பாவங்களை நினைவு கூறாமலும், இருப்பேன் என்று கூறுகிறார். இரண்டாம் வாசகத்திலும் புனிதப் பவுலடியார் தனது எபிரேயர் திருமுகத்தில் கிறிஸ்துவாகிய இயேசு இறைமகனாக இருந்தும் நாம் மீட்படைய பாவங்களிலிருந்து விடுதலைப் பெற தந்தையாகிய கடவுளுக்கு பணிந்து பல துன்பங்களை பெற்றுக் கொண்டார் என்று கூறுகிறார்.

இன்றைய நற்செய்தியிலும் நற்செய்தியாளர் யோவான் மானிட மகன் மாட்சிபெறபோவதை இயேசு தன் வாயிலாக வெளியிட்டதை கூறுகிறார். "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால், அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை பொருட்டாக கருதாதோர் நிலைவாழ்வுக்கு தம்மை உரியவராக்குவார் என்றும் கூறினார். எனவேதான் மடிந்து உலகிற்கு தன் உயிர்ப்பின் மூலம் புத்தொளி அளித்த தன்னலமற்ற அன்பை இயேசுவின் மாட்சியை நினைவு கூறுவோம், அவரிடம் உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும். புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும், உறுதிதரும் ஆவியை என்னுள்ளே பதித்திடும் என்று கூறும் மனதை பெற்றவர்களாக நம்பிக்கையோடு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உம் மாசற்ற

அன்பின் மாட்சிமையினால் அரவணைத்து, பாதுகாத்து, அன்பு செய்யும் நல்லுள்ளம் பெற்றிட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்து உயிர்களையும் பாதுகாக்கும் இறைவா, இவ்வுலக வாழ்வில் குடும்ப சூழ்நிலை கைதிகளாக இல்லத்தில் வளையவரும் முதிர்கன்னிகளையும், கைவிடப்பட்ட பெண்களை உம்பதம் ஒப்புவிக்கிறோம். அவர் தம் நிலைமாறி வாழ்வடைய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இத்தவக்கால நோன்பில் உமது பாடுகளை தியானிக்கும் உண்மையுள்ள கிறிஸ்தவனாக என்னை பண்படுத்தி தூயோனாக வாழும் தகுதியை எமக்களித்து உம் உயிர்ப்பில் கலந்து மறுவாழ்வு பெறும் பாக்கியத்தை எமக்களிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. பிரிவினைகளை நீக்கி ஒற்றுமைப்படுத்தும் இறைவா, காலத்தின் தன்மையை கனித்து, உம் அருளாட்சியும், இறையாட்சியும் நீடித்து வளர பிரிவினைகளை மறந்து மற்ற தீய சக்திகளுக்கு இடம் கொடாமல் ஒன்றுபட்டு மலர வேண்டிய உள்ளத்தையும் உறுதியையும் அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 19.03.2024 புனித யோசேப்பு மரியாவின் கணவர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. சாமு. 7: 4-5.12-14.16 II. உரோ. 4: 16,18-21 மத். 1:16,18-21,24

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, நாம் தவக்காலத்தில் இருந்தாலும்கூட இந்த ஒருநாள் நமக்கு மிகவும் மகிழ்ச்சியான ஒருநாள். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடைய வளர்ப்புத் தந்தை யோசேப்பின் பெருவிழாவினை தாயாம் திருஅவை இந்த தவக்காலத்திலும் பெருமகிழ்வோடு கொண்டாடுகின்றது. காரணம் புனித யோசேப்பின் உன்னதமான வாழ்வு அவரை நீதிமானாய் நேர்மையாளராய் அடையாளம் காட்டுகின்றது திருவிவிவிலயம். ஒரு குடும்பம் என்பதை ஒரு தலைவர் எவ்வாறு தாங்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்துக் காட்டியவர் இவர். அதனால்தான் புனித யோசேப்பு விவிலியத்தில் பேசாத மனிதராக இருக்கின்றார். இவரைப்பற்றி விவிலியத்தில் 13 இடங்களில் குறிப்புகள் உள்ளன.

இவர் நாசரேத்தில் வாழ்ந்ததாகவும் தாவீதின் வழித்தோன்றல் தச்சுத்தொழில் செய்பவர் என்றும் மரியாளின் கணவராகவும், இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகவும், இயேசு குழந்தையாக இருந்தபோது ஏரோது அரசனால் ஆபத்து என்பதால் அவரை எகிப்துக்கு தூக்கிச் சென்றதாகவும் ஏரோது அரசன் இறந்தப் பிறகு மீண்டும் நாசரேத்துக்கு வந்ததாகவும் கோவிலில் குழந்தையை எட்டாம் நாள் காணிக்கையாகக்

கொடுக்கும்போதும், காணாமல் போன இயேசுவை கண்டறியும்போது என கடவுளின் திருவுளத்தை முழுமையாக நிறைவேற்றினார். புனித சூசையப்பருக்கு கனவில்தான் கடவுளின் திட்டங்கள் கொடுக்கப்பட்டது. கனவில் கிடைத்தாலும் அது கடவுளின் திருவுளம், திட்டம் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டு ஆண்டவருக்காக தன்னையே கையளித்தார். எப்பொழுதும் தன் உழைப்பில் ஆழ்ந்த நம்பிக்கையும் நேர்மையும் கடின உழைப்பும் கொண்டு வாழ்ந்தவர். அவர் ஒரு நீதிமானாக நேர்மறையாளராக வாழ்ந்தார். மரியன்னை திருமணத்திற்குமுன் கருவுற்றிருந்தார் என்பதை அறிந்து யாரும் அறியா வண்ணம் அவரை விளக்க நினைத்தார். மரியன்னையை பொது இடத்தில் இகழ்ச்சிக்கு உள்ளாக்க அவர் விரும்பவில்லை. இதிலிருந்தே அவர் ஒரு நீதிமான் என்பதை நாம் அறிந்துக் கொள்ளலாம். மரியன்னைக்கு முன்னுரிமையும், மதிப்புமளித்து அவரையும் இறைமகன் இயேசுவையும் காத்தார். யோசேப்பு, கனவின் சூசை எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் புனிதரிடமிருந்து நாம் கற்கும் பண்புகள் தன்னை முன்னிலைப்படுத்தாத கணவர், இறைதிருவுளத்திற்கு பணிந்து வாழ்ந்தவர், நேர்மறையாளர், நீதிமான் இப்பண்புகளை நாமும் நம்முடைய வாழ்வில் ஏற்று புனித சூசையப்பரைபபோன்று அமைதி, பொறுமை, ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையும், அன்போடும் தங்களின் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து, மக்களை நல்வழியில் நடத்திட தேவையான அனைத்து அருள்வரங்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் பெட்டகமே இறைவா, தங்கள் தாய்நாட்டையும், உடமைகளையும், உறவுகளையும், தாய், தந்தை, மற்றும் பிள்ளைகளை இழந்து பிறநாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகும் மக்களை நீர்தாமே பாதுகாத்து அரவணைக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் பரம்பொருளே எம் இறைவா, புனித சூசையப்பர் எவ்வாறு கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து திருக்குடும்பத்திற்கு நல்ல தலைவராக பாதுகாவலராக வாழ்ந்தாரோ அவரைப்போன்று ஒவ்வொரு குடும்பங்களும் தங்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் கண்டுணர்ந்து செயல்படக் கூடியவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் ஒளிவிளக்கே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் முதல் சமூக சேவைப் புரியும் அனைத்து மக்களையும் உம்பதம்

சமர்ப்பிக்கின்றோம். மக்களுக்காக சேவை செய்யவும், நல்ல திட்டங்களை வகுத்து மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தைக் கண்டு நன்றியுள்ளவர்களாக வாழ வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.03.2024 புனித மாங்க்ரோவேகோ துரீபியுஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

புனித மாங்க்ரோவேகோ துரீபியுஸ் விழாவினை திரு அவை இன்று சிறப்பிக்கின்றது. இவரது காலம் கி.பி 1538-1606.இவர் ஸ்பெயின் நாட்டிலுள்ள மயோர்கா எனும் நகரில் பிறந்தவர். இளம் வயது முதலே மிகுந்த அறிவுக் கூர்மை உடையவராக இருந்தார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் சல்மான்கா பல்கலைகழகத்தில் சேர்ந்து சட்டக்கலையில் வல்லுநர் பட்டம் பெற்றார். இறைப் பணியில் நாட்டம் கொண்டு பயிற்சி பெற்று குருவானார். தன்னை முழுமையாக அர்ப்பணித்து கடின உழைப்பாலும் நேர்மையான பணிகளாலும் சிறப்புற்று ஆயராக உயர்ந்தார். பற்றுறுதியோடு பல நிலைகளில் சேவைகள் புரிந்தார். அதனால் தென் அமெரிக்காவில் உள்ள பெரு மாநிலம் முழுவதும் புனித வளனாரை பாதுகாவலராக கொண்டிருந்தாலும் தென் அமெரிக்க நாடு முழுவதும் உள்ள மக்களால் இப்புனிதர் பாதுகாவலராக போற்றப்படுகிறார். அந்த அளவிற்கு இவர் அவர்களை ஈர்த்துள்ளார். புனித லீமா ரோஸ் இவரிடம் நட்புடனும் தோழமையுடனும் இருந்ததாகவும், இவரிடம் உறுதிப்பூசுதல் பெற்றதாகவும் ஓர் தகவல் குறிப்பு உண்டு. உண்மையான இறைப் பற்றும் நேர்மையான பணிகளும் ஒருவரை உயர்த்தும் என்பதற்கு சான்றாக விளங்கிய இவரைப் போல் நாமும் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருத்தந்தை கர்தினால்கள் பேராயர்கள் ஆயர்கள் அருட்பணியாளர்கள் இருபால் துறவியர் கள் நற்செய்தி அறிவிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் முழுமையான ஈடுபாட்டோடு உழைக்க வேண்டிய அனைத்து வரங்களையும் வழங்கி வழி நடத்திக் காத்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் செப தவ பகிர்வு செயல்களை செய்யாமல் உள்ளார்ந்த நிலையில் இதயத்தின் வெளிப்பாடாக அமையும் வகையில் செயல்பட்டு உமது அன்பையும் கருணையும் பெற்று நல்ல சமாரியனாக வாழும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, எங்களின் தேவைகளை அறிந்து செயல்படும் நீர், நாங்கள் பலவிதமான பிரச்சனைகளாலும், கஷ்டங்களாலும், குழப்பங்களாலும் சோர்ந்திருக்கும் வேளையில் நீரே எங்களை தேற்றி, ஆறுதளித்து, வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.03.2024 ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 50: 4-7 II. பிலி. 2: 6-11 மத். 26: 14-27: 66

கிறிஸ்தவர்களின் நாற்பதுநாள் தவக்காலத்தில் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக குருத்தோலை ஞாயிறு கருதப்படுகின்றது. இயேசு கிறிஸ்து எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்புடன் நுழைந்ததை ஆண்டுதோறும் நினைவுப்படுத்தும் ஒரு நிகழ்வாக குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்படுகிறது. குருத்தோலை ஞாயிறு என்பது இயேசு கழுதைமேல் அமர்ந்து ஒலிவ மலையில் இருந்து வந்து கெதரோன் பள்ளத்தாக்கின் வழியாக எருசலேமுக்குள் நுழைந்த வெற்றிப் பவனியை நினைவுகூறும் நாளாகும். இயேசுவின் போதனைகளைக் கேட்டிருந்த மக்கள் இயேசு கழுதையின்மீது அமர்ந்து ஊர்வலமாக வருவதைப் பார்த்ததும் அவர்கள் தங்களை உரோமையர்களிடமிருந்து காக்க வந்த ராஜா என்று நினைத்து வரவேற்றனர். அக்காலத்தில் ஒரு அரசன் போரில் வெற்றிபெற்று நாட்டிற்கு திரும்பி வரும்போது குருத்தோலைகளைக் கையில் பிடித்து வரவேற்பது வழக்கமாக இருந்தது. அதனைப்போல் இயேசுவை மக்கள் வரவேற்றனர். அக்காலத்தில் அரசர்கள் குதிரையின்மேல் ஏறி விடுவார்கள். இங்கு இயேசு கழுதையின்மேல் வந்ததை அவருடைய தாழ்மையை மக்களுக்கு எடுத்துக் கூறுகிறது. "ஓசன்னா" என்று ஓலமிடும் இந்தக் கூட்டம் "சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிடும் என்று தெரிந்திருந்தும், வழியில் விரிக்கப்பட்ட துணிகள் தனது உடல் முழுவதும் ஆடைகள் அகற்றப்படும் என்பதை அறிந்திருந்தும் கழுதைமேல் கம்பீரமாக எருசலேம் நோக்கி பவனியை தொடர்கிறார் இயேசு.

பசுமை நிறத்துடன் செழுமையாக காட்சியளிக்கும் குருத்தோலை நம் துன்பத்திலிருந்து நம்மை துளிர்விட்டு எழச்செய்யும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவும், ஒவ்வொரு துன்பமும் ஒரு சிலுவையே. அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றபோது, நமக்கு மீட்பைக் கொடுக்கிறது என்பதை உணர்த்துகின்றது. இயேசு துன்பத்தைவிட்டு விலகி ஓடவில்லை. சிறுவர்களுக்கு பள்ளிவாழ்க்கை துன்பம், பெரியவர்களுக்கு குடும்ப பொறுப்பு துன்பம், முதியவர்களுக்கு வாழ்வின் இறுதிக்காலம் துன்பம், இளைஞர்களுக்கு தங்களுடைய எதிர்காலத்தை நினைக்கும்போது துன்பம், இறைவன்மேல் நம்பிக்கைவைத்து, துன்பம் என்னும் சிலுவையை இயேசுவோடு சுமக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம். தன் உடலைக் கிழித்துப் பலியாக்கி, வேதனை உணர்வுகளைப் பாடுகளாக்கி மனிதனுக்கு முழு விடுதலையை வாங்கித் தரும் இயேசுவின் பாடுகளை இத்திருப்பலியில் தியானித்து நம் துன்பங்களை பலியாக ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்தையும் பராமரிக்கும் தந்தாய், திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவரின் உள்ளத்திலும், உமது பேரன்பையும், பரிவிரக்கத்தையும், நிறைவாய்ப் பொழிந்து, திருஅவையை கட்டியெழுப்பும் கருவிகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிக்கும் மகத்துவமிக்க எம் இறைவா, எமது நாட்டு அரசியல் தலைவர்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து வாழ்வாதாரத்தை உயர்த்தி ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை கண்டடையச் செய்திட வேண்டுமாறும், சமூக உறவில் ஒன்றுபட்டு வாழ வழிவகை செய்திடவும், நாட்டிற்கும், உலகிற்கும் பயனளிக்கக் கூடிய தலைவர்களை வரும் தேர்தல்களில் அடையாளம் காட்ட வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகின்றோம்.

3. சிலுவையின்மீது தம் உடலில் எம் பாவங்களைச் சுமந்த இயேசுவே, இன்றைய குருத்தோலைப் பவனியில் பங்கெடுத்து குருத்து ஞாயிறு திருவழிபாட்டின் வழியாக ஆசீரைப்பெற இங்கே கூடிவந்திருக்கும் எங்களையும் எங்கள் பங்கு சமூகத்தையும் இயேசுவின் கீழ்ப்படிதல், தாழ்ச்சி என்ற உயரிய நற்குணங்களால் நிரப்பி கிறிஸ்துவின் மனநிலையில் அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழச்செய்ய வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

4. குடும்பங்களைக் கட்டியெழுப்பும் தந்தாய், நாசரேத்து திருக்குடும்பம் வாழ்ந்து காட்டிய அரே நெறியை நாங்களும் கடைப்பிடித்து எங்கள் குடும்பங்கள் கோயிலாய் ஒளிர்ந்திட எமக்கு சுயநலமற்ற அன்பும், அடுத்திருப்பவர்களிடம் உறவு பாராட்டுகிற நல்ல உள்ளத்தையும் தந்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## 31.03.2023 உயிர்ப்பு ஞாயிறு (காலை) திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. தி.ப. 10: 34,37-43 II. கொலோ. 3: 1-4 யோவா. 20: 1-9

இறையேசுவில் பிரியமானவர்களே, உங்கள் அனைவருக்கும் மரணத்தை வென்ற மாமன்னர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் பெருவிழா வாழ்த்துக்கள். இயேசுவின் உயிர்ப்பு விழா வாழ்வின் நிறைவு நாள். இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவ மதிப்பீடுகளின் முழுமை. தீய சக்திகளோடு அவர் செய்த போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி. இன்றைய நற்செய்தியில் (யோவான் 8:20) மகதல மரியா, யோவான், பேதுரு இயேசுவின் உயிர்ப்புக்கு முக்கியமான சாட்சியம் பகிர்கின்றனர். இயேசுவின் வாழ்விற்கும் உயிர்ப்பிற்கும் விரிவான சாட்சியத்தை

புனித பேதுரு முதல் வாசகத்தில் தருகிறார். "இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தப்பின் அவரோடு உண்டும், குடித்தும் வந்த நாங்கள் சாட்சிகள் (தி.ப. 10:42) என்று யூதர்களுக்கும் தொடக்க திருஅவைக்கும் சாட்சியம் பகர்கின்றார். இறைவார்த்தைகள் ஒவ்வொன்றும் உயிர்ப்பின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றது. புதிய வாழ்வின் நம்பிக்கையை உணர்த்துகின்றது. ஏனெனில் இயேசு கிறிஸ்து மரணத்தின் கடவுள் அல்ல, மாறாக உயிர்ப்பின் கடவுள். புனித பவுல் தனது மடலில் (1கொரி.15:12-14) அற்புதமான வார்த்தைகளில், ஆணித்தரமான இவ்வாறு கூறுகிறார்.

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையெனில் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாய் இருக்கும்" என்று கூறுகிறார். இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நமக்கு முடிவில்லா வாழ்வு உண்டு என்பதை உணர்த்துகின்றது. "உயிர்த்தெழச் செய்வதும், வாழ்வு தருவதும் நானே, என்னிடம் நம்பிக்கைக் கொள்கிறவன் இறப்பினும் வாழ்வான்" என்று யோவான் நற்செய்தியின் வழியாக அறிந்திருக்கிறோம். எனவே மரணத்தின் தோல்வியையும், மீட்பின் நம்பிக்கையையும் கொண்டாடும் நாம் அனைவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தார், உயிர்த்த அவர் அஞ்சாதீர், மன அமைதியாய் இருங்கள் என்று வாழ்த்துகின்றார்.

அந்த மனநிறைவோடு அச்சம், கலக்கம், பயம், திகில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு மனநிறைவையும், மன அமைதியையும் கொண்டு வாழ்வோம். கிறிஸ்துவுக்குள் நம்மை இணைக்கும் சாட்சிய வாழ்வு வாழலாம். கிறிஸ்துவுவோடு நாம் இறந்தால், கிறிஸ்துவோடு வாழ்வோம் என்ற பவுலடியாரின் வார்த்தைகள் நம் வாழ்வின் செயலாக்கவும், இவ்வுலகிலுள்ளவற்றின்மீது மனதை செலுத்தாமல் மேலுலகிலுள்ளவற்றின்மீது மனதை செலுத்த வேண்டுமென்ற பவுலடியாரின் வார்த்தைகளின்படி நம்மை உருவாக்கவும், உயிர்ப்பில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், மறைப்பணியாளர்கள் அனைவரும் திருத்தூதர்களைப்போல மனவுறுதியோடும், உற்சாகத்தோடும் தைரியத்தோடும் இயேசுவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பு இவைகளைப்பற்றி பறைசாற்றிட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நற்கருணை நாதரே இறைவா, உயிர்த்த உமது உடல் தினமும் நற்கருணை வடிவில் எங்கள் இதயத்தில் வருகிறது என்பதை நாங்கள் உணரவும், உம்முடைய வார்த்தைகளில் நம்பிக்கைக் கொண்டு, உம்மையே பற்றிக்கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. தியாகத்தின் இருப்பிடமே இறைவா, உமது வாழ்வின் வழியாகவும் மரணத்தின் வழியாகவும் நீர் செய்த தியாகங்களைப்போல நாங்களும் பிறருக்காக எங்களிடம் உள்ள நல்ல பண்புகள், நேரம் போன்றவைகளை எங்கள் துன்பங்கள் பாராமல் பிறருக்கு உதவும் நல்ல மனதைத் தந்திடவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நானே வாழ்வும் உயிர்த்தெழுதலும் என்று கூறிய இறைவா, எங்களின் நம்பிக்கை இறப்பின் நம்பிக்கையாக இல்லாமல் உயிர்ப்பின் நம்பிக்கையாக வாழ்வின இறுதிவரை வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## சிலுவைப் பாதை: உறவு செரிந்த குடும்பங்களும் காலணிகளும்

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

இறைவனைத் தேடும் இதயங்களே, இன்று குடும்பங்கள் இறைவனின் இதயமாக இருக்கிறது என்பதை உணர்ந்திடுவோம். குடும்ப உறவுகள் உயிரோட்டமாக இருக்க கடவுளே தந்தை, மகன், தூய ஆவியார் என மூவரும் ஒரே குடும்பமாக வாழ்கின்றார். குடும்பமாகவே படைத்தார், இறைவுறவோடும், மனித உறவோடும் வாழும் குடும்பங்களில் இறைவன் பிரசன்னமாக வாழ்கின்றார். மனித உறவைத் தேடியே பரமன் இயேசு மண்ணில் வந்தார். அந்த உறவு தந்தையோடு இணைந்த உறவாக மாறவேண்டும் என்று தன்னுயிரை தியாகம் செய்தார், தன்னுயிர்ப்பிலும் பங்களித்தார். ஆனால் இன்றைய குடும்பங்களின் நிலை என்ன? எல்லா குடும்பங்களும் இறையருள் பெற்ற நல்ல குடும்பங்களே. இருந்தாலும் சில குடும்பங்கள் பிளவுபட்டுக் கிடக்கிறது. சமாதானம் இல்லாத குடும்பங்கள், ஏழ்மை, வறுமையுற்ற குடும்பங்கள், கவலைத் தோய்ந்து மகிழ்ச்சியற்ற குடும்பங்கள், பல்வேறு தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள குடும்பங்கள், என பல உண்டு. புனித பவுல் சொல்வதுபோல விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரே குடும்பமாய் இருப்பதற்காக கடவுளிடம் மண்டியிட்டு வேண்டுகிறேன் என்கிறார். குடும்பங்களில் உறவு முறிவு என்பது ஏற்பட்டால் அது மரத்தின் ஆணிவேர் அழுகிப் போவதற்கு சமம். இறை மனித உறவில் மகிழ்ச்சியாக வாழமுடியாததற்கான காரணம் என்ன? என்பதை சிந்தித்து இறைஒளியில் ஒப்புரவாகிட இயேசுவின் போதனைகளை வாழ்வாக்கிட இச்சிலுவைப் பாதையில் பங்கேற்போம்.

**பாடல் :** உறவு ஒன்று உலகில் தேடி...

நம் திருத்தந்தையின் கருத்துக்களுக்காகவும் நமது நாட்டிற்காகவும் நமது சொந்த கருத்துக்களுக்காகவும் இச்சிலுவைப் பாதையை ஒப்புக்கொடுப்போம்.

**பாவமன்னிப்பு செபம் :** எல்லாம் வல்ல இறைவனிடமும்...

## முதல் நிலை: இயேசு சாவுக்கு தீர்ப்பிடப்படுகிறார்

**திவ்விய இயேசுவே...**

குற்றமில்லாதவர் குற்றவாளியாக தீர்ப்பிடப்படுகிறார். சாந்தமே உருவானவர் அமைதியாக ஏற்றுக்கொள்கிறார் அதை. இன்று நம் குடும்பத்தில் குற்றம் யார் பக்கம் என்று அலசி ஆராயாமல் பார்த்த நொடியில் கேட்ட நொடியில் தீர்ப்பு வழங்குகின்றோம்.

**மனைவி** : இதுல என் தப்பு ஒன்னுமில்லீங்க எல்லாம் உங்க தப்புதான்

**கணவன்** : நான் என்ன செய்தேன்?

**மனைவி** : உங்க அம்மா கூட சேர்ந்து ஆடுநீங்க இல்ல நமக்குள்ள சண்டவர காரணமே உங்க அப்பா அம்மாதான்.

**கணவர்** : சும்மா அவங்கள எதற்கு இழுக்குற

**மனைவி** : உங்க தம்பி தங்கச்சிக்கு வக்காளத்து வாங்கிகிட்டு இங்க வந்து உட்காந்துக்கிட்டு என்னையே எதிர்த்து பேசுவாங்களா?

ஒருவருடைய அன்பை அறிவுரையை என்ன சொல்ல வருகிறார் என்ற நோக்கத்தை புரிந்துக் கொள்ளாமல் அவருடைய நன்மை தனத்தை சிந்தியாமல் ஒருவரை வெறுப்பதும், தீர்ப்பிடுவதும் பாவச்செயலாகும் பிறர்மீது பழிசுமத்தி தன்னை நல்லவனாக, நல்லவளாக நியாயப்படுத்தி பிறரை தீர்ப்பிடும் செயல் குடும்பத்தில் தினம் தினம் அரங்கேறுகிறது. பிடிக்காதவர்களை பார்க்கும்போது சாடைபேசுவது அவர்களைப் பற்றி பேச்சு வந்தால் அவர்கள் அப்படித்தான் என்று தீர்ப்பு சொல்லுவது உறவுக்கு நாம் வைக்கும் தீயாகும். குடும்ப உறவுகளை சாம்பலாக்கிவிடும் என்பதை நினைத்து நாம் மாறுவது எப்போது? தீர்ப்பிடும் கடினமான வார்த்தைகள் உறவை முறிக்கின்றன.

**செபம்**

அன்பு இயேசுவே, என் சுயநலத்திற்காக என் தவற்றை மறைப்பதற்காக பிறர்மீது பழிபோட்டு பிறரை காயப்படுத்தியிருக்கிறேன். ஒற்றுமைக்கு ஊருவிளைவித்திருக்கிறேன். பிறருக்கு தீர்ப்பிடும்போது நான் எனக்கே தீர்ப்பிடுகிறேன் என்பதை உணர்ந்து பிறரை தீர்ப்பிடாமல் வாழ வரம் தாரும்.

**எங்கள் பேரில் தயவாயிரும்...**

## இரண்டாம் நிலை: பாரமான சிலுவையை மனமுவந்து சுமக்கின்றார்

**திவ்விய இயேசுவே...**

என் அப்பா அம்மா எனக்கு பெரிய சுமை, என்னுடைய மாமனார் மாமியார்தான் எனக்கு பெரிய சுமை, என் மனைவி எனக்கு பெரிய சுமை, என் கணவர் எனக்கு பெரிய சுமை, என் பிள்ளைகள் எனக்கு பெரிய சுமை என் தங்கை கல்யாணம் முடிஞ்சிட்டா சுமை தீரும் பெரிய பாரம் அதுதான்

சொத்து பிரச்சனை ஒரு பெரிய சுமை, சொத்து ஒரு சுமை என் நோய் ஒரு சுமை, கடன் ஒரு சுமை இவ்வாறு உறவுகளை கையாளத் தெரியாமல் தேங்கி நிற்பதும் ஒரு சுமைதான். உறவுகளும் உழைப்பும் சுமையாக தெரிய காரணம் உறவின் ஆழம் தெரியாததே. அதன் அவசியம் உணராததே காரணம் அன்றாட சிலுவைகளை எளிதாக மாற்றும் கலை இயேசுவிடம் உண்டு அந்த நற்பயிற்சியை பெறாமலேயே, இயேசு தரும் நற்பயிற்சியை பெறாமலேயே பொறுப்புகளை கையாளும்போது வாழ்வு சுமையாகிறது. நம் வாழ்வின் ஒவ்வொரு நகர்வும் சுமையாகத் தெரிகிறது. சுயநலமும் அறியாமையுமே சுமைக்குக் காரணம் என உணருவோம். சுமையாகிப் போன உறவுகளில் சுகம் துளிர்க்க முடியுமா? உறவுகள் சுமையல்ல சுகமென்று உணருவோம் சுருங்கிப்போன உறவுகளை விரிவுப்படுத்துவோம். நற்பயிற்சியையும் நற்குணத்தையும் நமதாக்குவோம்.

### செபம்

அன்பு இயேசுவே, உறவுகளை சுமையாக எண்ணாமல் என் சொந்த உடலென கருதி அன்புடனும், நட்புடனும் வாழ வரம் தாரும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## மூன்றாம் நிலை: இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

இயேசு களைப்பால் தடுமாற்றம் அடைகிறார். நாமே மாறிவரும் மாயஉலகில் நுகர்வு கலாச்சாரத்திற்கு அடிமையாகி தற்சார்பு நிலையிழந்து ஊடகத்திற்குள் விழுந்து கிடக்கும் குடும்பங்கள் ஆயிரம் ஆயிரம். ஒரு காலத்தில் ஊடகம் நமக்கு தூரமாக செய்தி ஒளிபரப்பாக இருந்தது. இன்று நம் கைக்குள் வந்துவிட்டது. நுகர்வு விளம்பரங்கள் நம்மை கவர்ந்திழுக்க பலரும் அதற்கு இறையாகிப் போகின்றோம். ஆடம்பரப் பொருட்கள், கார், பைக், வீடுகள் வாங்களும் என்று சாமானியன் துவங்கி கோடிஸ்வரன் வரை கனவாகிப்போய்விட்டது. இது பொருளோடு நிறுத்தவில்லை. நடை உடை நாகரீக கலாச்சாரம் நம்பிக்கை என்று நம் ஒட்டுமொத்த வாழ்வையே உறுஞ்சும் இராட்சத இயந்திரமாக உருவெடுத்துள்ளது. இந்த பேராசையில் சிக்கி தத்தளிக்கும் குடும்பங்களை நினைத்துப் பார்ப்போம். அண்ணன் செய்வான், அக்காள் செய்வாள், மாமா செய்வார், பிள்ளைகள் செய்வார்கள், என்ற எதிர்பார்ப்பு கனவு தகர்க்கப்படுகின்றன. பேராசை சிலை வழிபாட்டிற்கு ஒப்பான பாவம். கொலோ 3:5 இயேசுவை வெளிப்படுத்தி வாழ அழைக்கப்பட்ட நான் நானாக வாழாமல் வேறு ஒருவரையே விரும்பி தேடுகிறேன். என் வாழ்வில் மாற்றம் எப்போது வரும்.

### செபம்

அன்பு இயேசுவே, நுகர்வு கலாச்சாரத்திலிருந்து என் கண்களையும் மனதையும் பேராசை என்னும் பேயிடமிருந்து என் ஆன்மாவை விடுவித்துக்

கொண்டு இறைத்தந்தையின் விருப்பப்படி உறவுகளுக்குரிய கடமைகளைச் செய்ய வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும்...**

**நான்காம் நிலை: இயேசு தம் தாயைச் சந்திக்கிறார்**

**திவ்விய இயேசுவே...**

தாய் சேய் சந்திப்பு இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதற்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது. குடும்பத்தில் நன்மை செய்தவரை வெற்றிகள் ஈட்டித்தருபவரை பாராட்ட மனமில்லாத நிலை. சொத்து, சுகம் சேர்த்து வைத்த மாமியார், மாமனாரை, பெற்றோர்களை பாராட்ட மனமில்லாத நிலை, விளையாட்டில், படிப்பில் வெற்றிபெறும் குழந்தைகளை பாராட்டாத நிலை, பெற்றோரின் தியாகத்தை உழைப்பை பாராட்ட மறந்த குழந்தைகள், நன்மை செய்தவரை ஊக்குவிக்க தவறிய நிலை, நீ என்ன பெருசா சொத்து சேர்த்து வச்சிட்ட... நீ என்ன சாதிச்சிட்ட நான் உன்ன பாராட்ட... போ... என்ற அலட்சிய போக்கு. உதாசீனமான வார்த்தைகளால் உறவுகள் உடைந்து போகின்றன. குடும்பம் என்ற ஒரு சொல்லுக்காக அவர்கள் சிந்திய வியர்வை, கடும் வலிகள், அவமானங்கள், பல தோல்விகள் இவற்றின் மத்தியில் மகிழ்ச்சியை மட்டுமே குடும்பத்திற்கு தந்தவர்களை நன்றியுடன் நினைப்போம். நன்றி மறந்த நிலையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வோம்.

**செபம்**

அன்பு இயேசுவே, குடும்ப உறவுகளில் பெற்றோருக்கு உதவி செய்ய முடியாத நான், எவ்வாறு பிறரன்பு சேவையில் ஈடுபட முடியும் என்பதை உணர்ந்திடச் செய்யும். முழுமனதுடன் பெரிவர்களை மதித்து சேவை செய்து அவர்கள் மூலம் உமது ஆசீரைப் பெற்றுக்கொள்ள அருள்தாரும் ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**ஐந்தாம் நிலை: இயேசுவின் சிலுவையை சுமக்க சீமோன் உதவுகிறார்**

**திவ்விய இயேசுவே...**

இயேசுவுக்கு சீமோன் உதவினார், நம் குடும்பங்களில் உள்ள முதியோர், நோயுற்றோர், துணையை இழந்தோர் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள்? பெரியவர்களை பார்த்து பெருசு என்றும் நோயுற்றவர்களைப் பார்த்து அது கிடக்குது அதுக்கு என்ன என்ன பண்ண சொல்ற... தண்டச்சோறு இதுக்கு மருந்து செலவு வேற, இதுக்கெல்லாம் சாவு வரமாட்டேங்குது. இந்த கடும் வார்த்தைகள் உள்ளத்தை உடைந்து போகச் செய்கிறது. இது நோயைவிட கடும்வலியை உண்டாக்குகிறது. முதியவர்கள் பல குடும்பங்களில் உடைந்து போன மரச்சாமான்கள் போல

பார்க்கப்படுகின்றனர். காரணம் அவர்களால் பயனில்லை என்ற எண்ணம். அவர்களின் அழைப்பு அன்புக்கும் முதுமையின் ஆசீருக்கும் முன்னால் நம் சொத்தும் செல்வாக்கும் பகட்டும் குப்பை என்பதை உணர்வோம். ஒருபடி மேலே போய் முதியோர் இல்லங்களில் தங்கள் பெற்றோரை விடுவது கேவலமான செயல். அவர்கள் இல்லையேல் நானில்லை என்ற உண்மையை மறந்த மடச்செயல். நோயுற்றப் பெற்றோரை கவனியாது, அவரை பேணாது, அன்புக்காக பிள்ளைகளில் தொடுதலுக்காக அரவணைப்பான நல்ல வார்த்தைக்காக ஏங்கும் பெற்றோர் ஆயிரம் ஆயிரம். அன்பான பேச்சு அரவணைப்பான சொல் ஆயிரம் மருந்துகளுக்கு சமம் என்பதை நாம் உணர்வது இல்லை. முதியோரை அவமதிப்பது வேறற்ற மரத்திற்கு சமமான வாழ்க்கை, அதில் இறையாசீர் இருக்காது. சாபம் மட்டுமே மிஞ்சும். அவர்களைக் கொண்டு உன்னைப் படைத்த கடவுள், அவர்கள் மூலமாகவே உன்னை ஆசீர்வதிப்பார். விவிலியக் குடும்பங்களை நினைவு கூர்ந்து பார்ப்போம். பெற்றோர்கள் இவ்வுலகில் காணும் கடவுள், கடும் வார்த்தைகளால் தீய செயல்களால் முதியோர் உறவை இழிவுபடுத்தாமல் இருப்போம்.

**செபம்**

ஓ கிறிஸ்தவனே, உன் மகிமையை உணர்வாயாக, நீ மறுகிறிஸ்துவாக இருந்தால் கிறிஸ்துவுக்கு ஆறுதல் அளிக்க வரமாட்டாயா? ஆம் ஆண்டவரே, இதுவரை உம் சிலுவையை நான் தூக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்போது ஆவலாய் இருக்கும் என்னை ஏற்றருளும், அன்றாடம் சிலுவையை அன்போடு அரவணைக்க, தூக்கி சுமக்க வரம் அருளும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## ஆறாம் நிலை: இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள்

**திவ்விய இயேசுவே...**

கூடிநின்று வேடிக்கைப் பார்த்த அத்தனைப் பேரும் இயேசுவின் முகத்தை துடைக்க வேண்டும் சிறு ஆறுதலாவது அவருக்குத் தரவேண்டும் என்ற எண்ணம் அவளை உந்தித்தள்ள இயேசுவின் அருகில் சென்று, முகத்தைத் துடைக்கிறாள். இயேசுவின் முகத்தை பரிசாகப் பெருகிறாள். நம்மில் எத்தனைப் பேர் குடும்பத்தில் கனிவாகப் பேசி ஆறுதலாக இருக்கின்றோம். வெடுக்குப் பேச்சி, வேடிக்கைப் பேச்சி, குத்திக் காட்டுவது, கிண்டல் பேச்சு, சண்டை பிடிக்கும் கோபப் பேச்சு, கலகப் பேச்சு, புறக்கணிப்பு பேச்சு, என பலவாறு பேசுகிறோம். செத்தாலும் என் மூஞ்சில் முழிக்காதே என்று உறவுகளை காயப்படுத்துவதை வாடிக்கையாக்கி வைத்துள்ளோம். தவறுசெய்தவரை ஏற்றுக்கொள்ளாமல் வெறுக்கும் போது அதனால் அவர் கசப்புணர்வோடு தற்கொலை எண்ணத்திற்கு

செல்வதோ, அல்லது தேவையற்ற தீய பழக்க வழக்கத்திற்கு தன்னை உட்படுத்திக் கொள்ளவோ நாம் காரணமாகி விடுகின்றோம். ஒருவரை உதாசீனப்படுத்தி நடத்தும்போது, மறுமுறை அவர் நெருங்கி வரவே அவர் யோசிப்பார், அன்பை விதைக்க வேண்டிய நம் வார்த்தைகள் வம்பை வளர்க்கக் கூடாது. உறவுகள் சிறுசிறு காயங்களால் சிதைந்து கிடக்கிறது. நாம் வெரோணிக்காவாக மாறமுடியுமா?

செபம்

அன்பு இயேசுவே, வீம்பு பேசி வம்பளக்கு நஞ்சு நிறைந்த பேச்சிலிருந்தும் பிறர்வாழ்வை கெடுத்து என்வாழ்வு சக்கரம் முழுவதையும் எரித்துவிடும் தவறான பேச்சிலிருந்தும் என்னை விடுவித்தருளும். ஆறுதலின் கருவியாய் என்னை மாற்றிவிடும் இறைவா. ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

இயேசுவின் தடுமாற்றத்திற்கு காரணம் இருந்தது, பசி, சோர்வு, உடல் வேதனை, கலைப்பு அதனால் அவர் தடுமாறி விழுந்தார். இன்று எத்தனை குடும்பங்கள் சந்தேகம், பொறாமை, நம்பிக்கைத் துரோகம், பிரிவினை என்ற குழியில் விழுந்து கிடக்கின்றனர். கணவனுக்கு தெரியாமல் மனைவி, மனைவிக்கு தெரியாமல் கணவன் என்று கள்ளத்தனமான உறவில் வீழ்ந்து கிடக்கின்றனர். இதனால் பல குடும்பங்களில் மகிழ்ச்சியும் இறையாசீரும் பரிபோய் பரிதாபமாக நிற்கின்றனர். பல குடும்பங்களில் சண்டை சச்சரவும், விவாகரத்தும், பிரிவினையும் சூழ்ந்துக் கொண்டிருக்கின்றன. குழந்தைகளின் நிலை பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது. பல குடும்பங்களில் சந்தேகத்தினால் ஓயாத சண்டையும், குடிக்கு அடிமையாதலும், இவன்கிட்ட வாழ்வதைவிட எங்கேயாவது போய் சாகலாம். கடுமையான வார்த்தைகள், குழந்தைகளை கொலை செய்வது, தன்னை மாய்த்துக் கொள்வது என உயிருக்கு ஊருவிளைவிக்கும் கேடுகள். நிம்மதி இல்லாத ஒரு வாழ்வு, இறைவன் பார்வையில் தொப்புள்கொடி உறவை விட கணவன் மனைவி உறவுதான் மிகப் புனிதமானது. பிரமாணிக்கமின்மையால் வரும் உறவின் முறிவு சாவை விட கொடியது என்பதை உணர்வோம். குடும்ப அமைதியை கெடுக்கும் தீய பழக்கத்தை இன்றே விட்டுவிட முடிவெடுப்போம்.

செபம்

அன்பு இயேசுவே, எங்கள் தவற்றை உணரவும் பாவ அழுக்கிலிருந்து விடுபட்டு ஒருவரை ஒருவர் அன்புடன் வழிநடத்தவும், உமக்கு நேர்மையாளவர்களாக வாழ அருள்தாரும் ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## ஐந்தாம் நிலை: இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதலளிக்கிறார்

**திவ்விய இயேசுவே...**

தன்னிலை உணராமல் கண்ணீர் வடித்து அழுத பெண்களைப் பார்த்து இயேசு சொன்னது. "உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று. எத்தனை பேர் குடும்பத்தில் நமக்காக அழுகின்றோம். நான் என் பிள்ளைக்கு முன்னுதாரணமாக வாழவில்லையே, பிள்ளைகளின் பார்வையில் நான் தூய்மையான வாழ்வு வாழ முடியவில்லையே, என் பிள்ளையை ஒழுக்கத்தில் வளர்க்க முடியவில்லையே என்று நாம் உணர்ந்திருக்கின்றேனா? பொறுப்பற்ற பெற்றோர்களாய் பல நேரங்களில் அதற்கொரு காரணம் சொல்பவர்களாகவே இருக்கின்றோம். பிள்ளைகள் இன்று செல்போனை வைத்துக் கொண்டு உலகமே தனக்கு சொந்தம் எல்லா உறவுகளும் மகிழ்ச்சியும் அதில் உண்டு என்று பெற்றோரை, பெரியோரை புறந்தள்ளி நல்லறிவை இழக்கும் இளைஞர் கூட்டம். பெற்றோருக்கு தெரியாத காதல் வாழ்க்கை கூடாநட்பு வீட்டிலோ நல்ல பிள்ளை இப்படி இரட்டை வேடம் போடும் போலியான பிள்ளைகளுக்காகவே இயேசு அழச்சொல்கின்றார். பிள்ளைகள் தரும் சம்பாத்தியத்திற்காக அவர்களை கண்டும் காணாது போகும் நிலை இதுவா நம் பொறுப்பு? அவர்கள் அழிவைக் கண்டு கண்ணீர் வடிப்பதோடு அவர்களின் மாற்றத்திற்காக நாம் எடுக்கும் முயற்சிகள் என்ன? சிந்திப்போம்.

**செபம்**

அன்பு இயேசுவே, பெற்றோர் பிள்ளைகள் உறவை சீராக்கும்போது குடும்பமே மகிழ்ச்சி அடைகின்றது என்ற உண்மையை எங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணரவும், ஒருவரையொருவர் மதித்து கீழ்ப்படிந்து, புரிந்துக்கொண்டு அன்புறவில் வாழ வரம்தாரும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## ஒன்பதாம் நிலை: இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

இயேசு மீண்டும் தன் பலவீனத்தால் முகம்குப்புற விழுகிறார். விழுந்தவர் விழுந்து கிடக்காமல் எழுந்து இலக்கு நோக்கி பயணிக்கிறார். இன்று எத்தனை குடும்பத் தலைவர் தலைவி பிள்ளைகள் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி வீழ்ந்தே கிடக்கின்றோம். குடும்பத்தலைவர் குடிக்கு அடிமையாகி சூதாட்டத்திற்கு அடிமையாகி குடும்ப நல்லுறவை கேள்வி குறியாக்கி குடும்பத்தை வதைக்கின்றோம், சுயமதிப்பை இழக்கின்றோம். பொறுப்பை தட்டிக் கழிக்கின்றோம், எழுவது எப்போது, குடும்பப் பெண்கள் ஒரு சிலர் சுற்றத்தாரை, உடன் பிறந்தோரை, அக்கம் பக்கத்தாரை, குறை சொல்லாமல், விமர்சிக்காமல், தீப்பிடாமல்

இருக்கவே முடியாது. சண்டை போடவில்லை என்றால் தூக்கமே வராது. தீய சொல்லுக்கும், தீர்ப்பிடுதலுக்கும் அடிமையாகிப் போன நிலை. குடும்பத்தில் பிளவுகளை உண்டாக்கும் அடிமைத்தனம், மூடப்பழக்க வழக்கத்திற்கு அடிமைத்தனம், இந்த பள்ளத்திலிருந்து எழப்போவது எப்போது? பிள்ளைகள்: பலர் புதிய புதிய போதைப் பழக்கத்திற்கும் கூடா நட்பில் நம்பிக்கையற்ற வாழ்விற்கும் கீழ்ப்படியாமைக்கும் சோம்பலுக்கும் இவ்வுலக செல்வ சுகபோகங்களுமேபோதும் என்றெண்ணி உலக மாயைக்குள் அடிமைப்பட்டு கிடக்கின்றனர். கடவுளை தேவைக்கு பயன்படுத்தும் விசுவாசமற்றக் கலாச்சாரத்தில் விழுந்து கிடக்கின்றனர். விழித்தெழப் போவது எப்போது?

**செபம்**

அன்பு இயேசுவே, பல்வேறு தீமைகளில் மூழ்கி அடிமைப்பட்டு கிடக்கும் எங்கள் வாழ்வு விடுதலைப் பெற்றிடவும், உம் ஒளி நிறைந்த வாழ்வாக மாறிடவும் எம் பொறுப்புக்களை உணர்ந்து வாழ்ந்திடவும் வரம் தாரும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## பத்தாம் நிலை: இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

**திவ்விய இயேசுவே..**

காயப்பட்ட இயேசுவின் உடலில் ஒட்டியிருந்த ஆடை உறிக்கப்படும் பொழுது வேதனையும் அவமானமும் அடைந்தார். பிறந்த மேனியனாய் பலர்முன் அவமானப்படுத்தப்பட்டார். யாருக்காக? நீங்களும் நானும் வாழ்வு பெறுவதற்காக. இன்று நம் குடும்ப உறவுகளில் இந்த செயல் அரங்கேறுகிறது. ஒருவரை ஒருவர் அவமானப்படுத்தும் பேச்சுக்கள், அண்ணன் தம்பி சண்டையில் ஆடைகளை களைதல், அடித்து துன்புறுத்துதல், கணவன் மனைவி சண்டையில் ஒருவருடைய மாண்பை மரியாதையை குலைக்கும் பேச்சு, உயிரைக் குடிக்கும் கொச்சை பேச்சு, குடும்ப உறவுகளில் மட்டம் தட்டி பேசும் பொழுது, உறவுகளை வார்த்தையால் நிர்வாணப்படுத்துகிறோம். மண்ணின் கலாச்சார மாண்பு, ஆள்பாதி ஆடைப்பாதி என்பது ஆடை பாவத்தின் அடையாளமாக வந்தது. இறைவன் தோளைச் சட்டையாக செய்து கொடுத்தார், ஆடை மனிதனின் கவுரவமாக பார்க்கப்பட்டது போய், மானத்தை மறைக்க உடுத்திய காலம் போய், இன்று கவர்ச்சிக்காக உடுத்த வேண்டும் என்ற மனநிலைமாற்றம் சீரழிவை காட்டுகிறது. சீரழிந்த கலாச்சாரத்தை பின்பற்றி ஆண் பெண்களைப் போல் நீண்ட முடிவளர்த்துக் கொள்வது. வளையல்கள் காதணிகளை போட்டுக் கொள்வது. பெண்கள் ஆண்களைப் போல உடுத்துவது, பாடிஷிப் என்ற பெயரில் இடறல் என்ற பாவத்தில் பிறரை வீழ்த்துவதும் வீழ்ந்து கிடப்பதும் அவமானத்தின் உச்சமே. இப்படி குடும்ப உறவில் தனிமனித வாழ்வில் மனித மாண்பை குலைப்பதற்கு

இடமளிப்பதும், துணைபோவதும் பாவமே. உடல் இறைவனின் கொடை என்பதை உணருவோம். நமது விருப்பங்களை நிறைவேற்ற அல்ல மாறாக இறைவிருப்பத்தை நிறைவேற்றவே இவ்வுடல் தரப்பட்டுள்ளது என்பதை சிந்திப்போம் வாழ்வில் மாற்றத்தை கொண்டுவர ஆசைப்படுவோம்.

செபம்

என்மீது நம்பிக்கைக் கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் இயந்திரக் கல்லைக் கட்டி ஆழ்கடலில் அமிழ்த்துவது அவருக்கு நல்லது பாவத்தில் விழுவதை தவிர்க்க முடியாது. ஆனால் அதற்கு காரணமாய் இருப்பவருக்கு கேடு. நீங்கள் கடவுளின் கோவில் என்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும், உங்களுக்கு தெரியாதா? கடவுளின் கோவில் தூயது, நீங்களே அக்கோவில். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பதினோராம் நிலை: இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்**

**திவ்விய இயேசுவே...**

இயேசு சுமந்து சிலுவையில் அவரது உடல் ஒன்றாக இணைக்கப்படுகிறது. மரத்தோடு மரமாக மாறிப்போகிறார். இரத்தம் பீரிட்ட வேதனையில் உச்சம் தொடுகிறார் இயேசு. இன்று நம் குடும்பங்களில் உற்றார் உறவுகளில் உறவு நிலைகள் எப்படி உள்ளது. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்பார்கள். ஒருவர் ஒருவருடைய குற்றத்தை பெரிதுப்படுத்தி ஈகோ பார்த்து பிரிந்து வாழ்கிறோமா? சகோதர சகோதரிகளிடம் சொத்து சுகம், கொடுக்கல் வாங்கலில் குறைகளை பாராமல் மன்னித்து ஒன்றுபட்டு வாழ்கிறோமா? இல்லை சொத்து சுகத்திற்காக உறவே வேண்டாம், நான் செத்தாலும் என் முகத்தில் முழிக்காதே. இனி வாசல மிதிச்சா பாரு என்ற வீம்புடன் வாழ்கின்றோமா? மன்னிக்க மனமில்லாமல் பிளவுபட்ட மனநிலையோடு ஒட்டியும் ஒட்டாமல் ஒப்புக்கு உறவாடும் பொழுதெல்லாம் நாம் இயேசுவை சிலுவையில் அறைந்துக் கொண்டுதான் இருக்கிறோம். பகை, வெறுப்பு, வைராக்கியங்களை வளர்த்துக்கொண்டு கனத்த இதயத்தோடு நான் தனியனாய் இருக்கும் போது உறவருந்த நிலையில் புலம்புவோர் பலர் உண்டு. குடும்ப உறவில் சிக்கல்கள் வரும்போது அதை எடுக்கத் தெரியாமல் அறுத்து எரியும் பொழுது பல உறவுகள் சிலுவையில் அறையப்படுகிறது. அங்கு வேதனையும் கண்ணீரும் மிஞ்சுகிறது. இதற்காகவா நாம் கிறிஸ்துவை பின்பற்றுகிறோம். உறவுகளை மன்னிக்க நல்ல மனமுண்டா?

செபம்

அன்பு இயேசுவே, என் பெற்றோர் பெரியோர்களிடத்தில் ஈகோ பார்த்து வைராக்கியமாக வாழாமல் சகோதர சகோதரிகளை மனமுவந்து

மன்னிக்கவும் மன்னிப்பு கேட்கவும் பிறரை காயப்படுத்தாமல் வாழ அருள்தாரும், ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

**பன்னிரெண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்**

**திவ்விய இயேசுவே...**

இயேசு சிலுவையில் கரங்களை விரித்து இவ்வளவாக நான் உன்னை அன்பு செய்கிறேன் என்று சொல்லியவர் "தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று சொல்லி ஆவியை ஒப்படைக்கிறார். அவரது மனித உடலேற்பின் லட்சியம் முடிவுக்கு வருகிறது. திருச்சிலுவையில் இயேசு தியாகத்தின் வெளிப்பாடாக தொங்கிக் கொண்டிருக்கிறார். பெற்றோர் பெரியவர்களின் உழைப்பை தியாகத்தை அன்பின் வெளிப்பாட்டை அவர்களின் வலியை தம்வலியைப் போல் உணராத குடும்பங்கள் ஆயிரம் ஆயிரம், நாம் உடல்கொண்ட மனிதனாய் பிறந்தபொழுது தாயின் தியாகமும் சீராட்டி பாராட்டி வளர்க்கப்பட்ட பொழுது தந்தை, மாமன், தாத்தா, பாட்டி, அத்தை, உடன்பிறந்தோர் இவர்களின் அன்பில், அரவணைப்பில், அமுதூட்டலில், வழிகாட்டலில் , கண்டிப்பில் வளர்ந்து வாலிபனாகி இருக்கிறோம். நமது உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சியில் பலரது ஈடுபாடும் தியாக பங்களிப்பும் இருக்கிறது என்பது சத்தியம். அன்புக்கு இலக்கணம் சொல்லும் தூய பவுல் அன்பு ஒருபோதும் அழியாது என்றார். யோவான் இன்னும் ஒருபடி மேலே போய் அன்பே கடவுள் என்கிறார். நம்மில் எத்தனைப்பேர் நாம் இதை உணர்ந்திருக்கிறோம். இந்த அன்பை உணர முடியாமலும் சிந்தனை, சொல், செயல்களில் வெளிப்படுத்தி அடுத்தவர் இதயத்தில் வாழ முடியாமல் பல உறவுகளை சிலுவைகளில் அறைந்தே வைத்துள்ளோம். இன்று பெற்றெடுத்த தாய் தந்தைக்கு என் இதய அன்பில் இடமில்லை. உடன்பிறந்தாருக்கு உரிமை கோருவதால் என் நெஞ்சில் இடமில்லை, உற்றார் உறவினரிடம் மதிப்பு மரியாதை எதிர்பார்த்து ஈகோவால் அன்பு செய்ய இடமில்லை என்கிறோம். மீதம் இருக்கின்ற வாழ்வை நாம் யாருக்காக வாழப்போகின்றோம்? உறவுகளில் தான் இறைவன் பிரசன்னமாயிருக்கிறார். உறவற்ற வாழ்வில் அன்பில்லை அன்பு எங்கு இல்லையோ அங்கே இறைவன் இல்லை இதை உணர்ந்து வாழ்வோமா?

**செபம்**

அன்பு இயேசுவே, என் கல்லான இதயத்தை எடுத்துவிட்டு கனிவுள்ள இதயத்தைத் தாரும். அன்பே என் வாழ்வின் அடித்தளமும் ஆணிவேருமாய் இருந்து உறவென்னும் கிளைகளைத் தாங்கிட வரம் தாரும் ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## பதிமூன்றாம் நிலை: இயேசுவின் உடல் அவர் தாய்மடியில் கிடத்தப்படுகிறது

**திவ்விய இயேசுவே...**

தம் ஒரே மகனை பலியாகக் கொடுத்த அன்னை ஆறுதல் இன்றி ஏங்கித் தவிக்கின்றார். அவள் இதயத்தில் வாள் ஊடுருவியது போல் பெறும் துயரம் வாட்டுகிறது. இன்றும் ஆறுதல் தேடி அலையும் குடும்பங்கள் ஆயிரம் ஆயிரம், எத்தனையோ உறவுகள் ஊனப்பட்டு போய் உடைந்து சிதைந்து அவலைகளாய், ஆதரவற்றவர்களாய் புத்தி பேதலித்தவர்களாய் முதியோர் இல்லங்களிலும் அனாதை விடுதிகளிலும் சாலை ஓரங்களிலும் தர்மம் எடுத்து வாழ்ந்து வருகிறார்கள். பலர் குடும்பங்களிலே அனாதைகளாய் நிற்கிறார்கள். காரணம் குடும்பங்களில் ஏற்றுக்கொள்ளாமையே. காசில்லாதவனுக்கு கடமை செய்ய இயலாதபோது உறவில் பங்கில்லை என்று குடும்பம் விரட்டுகிறது. ஏழ்மையை வறுமையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையற்ற குடும்பங்களில் குற்றச்சாட்டு. பண்பற்ற பாவ வாழ்க்கையை பார்த்து உடைந்து போன உறவுகள், ஆணவத்திற்கு அடங்கி இருக்க முடியாமல் அன்பைத் தேடிப் போகும் உறவுகள், ஏமாற்றப்பட்டு ஏமாந்துப் போன உறவுகள், ஆறுதல் தேடி அலைகின்றது.

ஆறுதலாய் இருக்க வேண்டிய குடும்ப உறவுகள், பல நேரங்களில் குறைகளை சுட்டிக்காட்டி காயப்படுத்தி அக்குடும்பத்திலிருந்து அன்னியப்படுத்துகிறது. செத்துப் போன நடைபிணமாக, செல்லா காசாக, உலுத்துப்போன உறவாக மாறிப்போக காரணம் குடும்பமே. உவப்பற்ற உப்பாக தெருவில் கொட்டப்படுகின்றனர். பல குடும்பங்களில் பலர் ஆறுதல் தேடி அலைகிறார்கள். இந்நிலை மாறுவது எப்போது. ஆறுதலையும் அன்பையும் தேடி அலையும் நெஞ்சங்களுக்கு அன்னை மரியாள் அடைக்கல தாயல்ல நீங்களும் நானும் அன்னைகளின் பிள்ளைகளென்றால். உடைந்த உறவுகளை, இறந்த உறவுகளை உயிர்ப்பிக்கும் சக்தியாக ஆறுதலையும் அன்பையும் அரவணைப்பையும் விதைக்கும் கருணையின் உருவாக மாறவேண்டும். அதுவே அன்னைக்கு நாம் செய்யும் உபகாரம். உறவுகள் பிரிவது உயிர்பிரிவதற்கு சமம். ஒருவரை வெறுக்கும் பொழுது அவர் அடையும் துயர் சாவுக்கு சமமானதென்பதை உணருவோம்.

### செபம்

என் அன்பு இயேசுவே, உம் தாய் உம்மைப் பிரிந்து தவித்தது போல் பலரும் தவிக்கிறார்கள் என்பதை உணர்ந்து குடும்ப உறவுகளில் ஒருவர் ஒருவருடைய வலியை வேதனையை புரிந்துக் கொள்ளவும், நல்ல வார்த்தைகளால் ஊக்குவிக்கவும் குறைநிறைகளை ஏற்று அன்பு செய்து ஆறுதலாக வாழ்வதற்கு கனிவுள்ள இதயத்தைத் தாரும். ஆமென்.

**எங்கள்பேரில் தயவாயிரும்...**

## பதிநான்காம் நிலை: இயேசுவின் உடலை அடக்கம் செய்கிறார்கள்

**திவ்விய இயேசுவே...**

ஊனியல்பு கொண்ட மனிதரை போன்றவராய் தன் சொந்த மகனை அனுப்பி மனிதரிடம் உள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார் தந்தையாம் கடவுள். தமது சாயலாக உள்ள மனித உறவைத் தேடியே இயேசு வந்தார். நல்ல வார்த்தைகளை மனித மனங்களில் விதைத்தவர், பலஆயிரம் கிறிஸ்து உருவாக வேண்டுமென்று நல்ல கோதுமை மணியாக மண்ணில் விதைக்கப்படுகிறார். செடியாக வளர்ந்து நூறு சதவிகிதம் பலன் தருவது போல நாமும் அவரது ஆவியால் மறுகிறிஸ்துவாக வாழ்ந்து உண்மையின் வித்துக்களாக பலன் தரவேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறார் இயேசு. கிறிஸ்துவின் ஆவியால் இயக்கப்பட நமது இயல்பை கிறிஸ்துவோடு ஒப்புரவாக்க இன்றே நாம் தயாராகுவோம். நல்ல குடும்ப உறவுகளுக்கு தடையாக இருக்கக் கூடிய காரணிகளை இயேசுவிடம் ஒப்புக்கொடுப்போம். தான்தோன்றி தனமான ஆசைகளையும், சென்ம பாவமாகிய சுயநலத்தையும், உறவுகளை மதிக்க முடியாத ஆணவப் போக்கையும், கீழ்ப்படிதலற்ற தன்மையும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் வார்த்தைகளையும், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியாத, மன்னிக்கும் மனமில்லாத உள்ளத்தையும், ஒப்புக்கொடுப்போம். உலக இன்பங்களை, சுகங்களைவிட உறவுகளே மேலானதென்று உணர்ந்திடுவோம். நமது உறவினால், உள்ளத்தினால் இறைவனைக் கண்டுக் கொள்வோம், அவரில் ஒன்றாய் கலந்து அவரில் வாழ முற்படுவோம்.

### செபம்

அன்பு தந்தையே இறைவா, மனித உறவுகள் உமது கொடை என்பதை உணர்ந்திடவும், குடும்பத்தில் மூத்தோர் வேறென்றும், இளையோர் அதன் கிளைகள் என்று மதித்து கீழ்ப்படிந்து அன்புடன், நட்புடன் தோப்பாக வாழ்ந்திட வரம் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும்...**

**அருள்நிறைந்த மரியே...**

**தந்தைக்கும், மகனுக்கும்.... ஆமென்.**

## புனித வாரம் நம்மைப் புனிதமாக்கும் வாரம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பர்களே, பிப்ரவரி 14ந்தேதியிலிருந்து நாம் தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம். சாம்பல் புதனன்று தொடங்கும் இக்காலம், ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து உயிர்ப்பு பெருவிழாவுக்கு முந்திய 40 நாட்களைக் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்களின் வாழ்வில் செய்த பாவங்களை நினைத்துப் பார்த்து, தங்களது வாழ்வைச் சீரமைக்கத்

தேவையான சூழ்நிலைகளை உருவாக்கித் தருகின்ற காலம் இதுவாகும். ஆகவே, நம்மை கடவுளுக்கு நெருக்கமாக அழைத்துச் செல்லும் புனித காலமாக இது திகழ்கின்றது. தவக்காலம் என்பது கிறிஸ்துவின் பாடுகளைத் தியானித்து பார்க்கவும், நமது வாழ்வை ஆழ்ந்து நோக்கவும் அழைப்பு விடுக்கிறது. இக்காலத்தில் தான, தர்மங்கள் மற்றும் ஒறுத்தல் முயற்சிகள் வழியாக நாம் நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென திருஅவை விரும்புகிறது. பகைமையும் வெறுப்பும் ஆதிக்க மனநிலையும் கொண்ட இவ்வுலகில் அன்பின் அரசாட்சியை நிறுவ வந்த இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க இத்தவக்காலம் நம் ஒவ்வொருவரையும் வழிநடத்திச் செல்கிறது என்பதே உண்மை. தவம் என்பது யூத மரபு மற்றும் விவிலிய அடிப்படையில் இருந்து, கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்ட பழக்கமாகும். முற்காலம் தொட்டே யூதர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக, பல நாட்கள் நோன்பு மேற்கொண்டு சாக்கு உடையுடன் சாம்பலில் அமர்ந்து இறைவனின் மன்னிப்பை வேண்டுவர்.

இதன் விளைவாக, பாவங்கள் செய்தவர்கள் நோன்பிருந்து தவம் செய்ய வேண்டும் என்ற வழக்கம் தோன்றியது. கிறிஸ்தவர்கள் பலரும் தனிப்பட்ட விதத்தில் பாவத்திற்கு பரிகாரமாக நோன்பு நோற்று தவம் இருந்தாலும், அனைவராலும் இந்த பழக்கம் பின்பற்றப்படவில்லை. அனைவரும் தவம் செய்யும் ஒரு காலத்தை உருவாக்க விரும்பியத் திருஅவை, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவுக்கு முந்திய சில நாட்களை தவக்காலமாக உருவாக்கியது. படிப்படியாக இத்தவ நாட்களின் எண்ணிக்கை நாற்பது என்றானது. இக்காலத்தில், கிறிஸ்தவ சமயத்தில் புதிதாக இணைய விரும்புவோருக்கு புகுநிலை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடவுள் தன்மையில் விளங்கிய இயேசு நம்மீது கொண்ட அன்பினால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவையேற்று மனிதரானார். அவர் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவை சாவையே ஏற்கும் அளவுக்கு தந்தை கடவுளுக்கு கீழ்ப்படிந்தார். "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) என்று கூறிய அவர், பாவிகளான நமக்காக, நாம் நிலைவாழ்வு பெறுவதற்காக, நம்மை தமது நண்பர்களாக ஏற்றுக்கொண்டு தமது உயிரை பலியாக்கினார்.

ஆண்டவராகிய இயேசு உலக மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக, தம்மையே சிலுவையில் பரிகாரப் பலியாக ஒப்புக்கொடுத்தார். பாவிகளான நமக்காக இறைவனாகிய இயேசு மனிதராகி, சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தம்மைத் தாழ்த்திக் கொண்டார். அவரது அன்பையும் இரக்கத்தையும் நினைத்து, நமது பாவங்களுக்காக மனம் வருந்தி அவரிடம் மன்னிப்பு வேண்ட தவக்காலம் உதவுகிறது. முற்காலத்தில் நாற்பது நாட்களும் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ணும்

வழக்கம் இருந்தது குறிப்பிடத்தக்கது. தவக்காலத்தில் சிலுவைப்பாதை பக்தி முயற்சியிலும், திருப்பலி வழிபாட்டிலும் அதிக அளவில் நாம் பங்கு பெறுகிறோம். தீயப் பழக்கங்களை விட்டொழித்து, தூய வாழ்வுக்கு நம்மைத் தயார் செய்ய ஆர்வம் காட்டுகிறோம். ஏழை, எளியவர்களுக்கும் அதிக அளவில் உதவி செய்கிறோம். மேலும், தவக்காலத்தின் வெள்ளிக்கிழமைகளில் அசைவ உணவைத் தவிர்ப்பதும், சாம்பல் புதன் மற்றும் புனித வெள்ளி தினங்களில் ஒரு வேளை மட்டுமே உணவு உண்பதும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வழக்கமாக உள்ளது.

இயேசு கிறிஸ்து தவத்தைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: "மக்கள் பார்க்க வேண்டும் என்று அவர்கள் முன்பு உங்கள் அறச்செயல்களைச் செய்யாதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும் போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். உங்கள் வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும். நீங்கள் நோன்பு இருக்கும்போது முகவாட்டமாய் இருக்க வேண்டாம். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மறைவாய் இருக்கிற விண்ணகத் தந்தைக்கு மட்டும் தெரியும். அவர் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்." இயேசு கிறிஸ்து தமது இறையரசுப் பணியைத் தொடங்கும் முன், 40 நாட்கள் நோன்பு இருந்து தந்தையாம் கடவுளோடு உறவாடினார். இதன் அடிப்படையிலேயே, திருச்சபை தவக்காலத்தை நாற்பது நாட்கள் கடைபிடிக்கிறது. தவக்காலத்தின் அனைத்து நாட்களிலும் திருப்பலியில் பங்கேற்று, சிலுவைப்பாதை செய்வது அல்லது இயேசுவின் திருப்பாடுகளை தியானம் செய்வது சிறந்த பக்தி முயற்சியாக கருதப்படுகிறது. இவ்வாறு கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்று நமது பாவங்களுக்கு பரிகாரம் செய்ய முடியும்.

தவக்காலத்தின் முதல் நாளான சாம்பல் புதனன்று, நம் நெற்றியில் பூசப்படும் சாம்பல் மனித வாழ்வின் நிலையாமையைக் குறிக்கிறது. நிலையற்ற உலகின்மீது அதிக நாட்டம் கொள்ளாமல், நித்திய வாழ்விற்கான தயாரிப்பை மேற்கொள்வதற்கான அழைப்பாக இது அமைகிறது. தூய்மையற்ற எதுவும் விண்ணகத்தில் நுழைய முடியாது என்பதை உணர்ந்து, கடவுளுக்கு ஏற்றத் தூயவர்களாய் நம்மை மாற்றிக்கொள்வது அவசியம். இத்தகைய ஒரு புனிதப்படுத்தும் காலமாகவே தவக்காலம் நமக்குத் தரப்பட்டுள்ளது.

பாவத்தின் ஆதிக்கத்தால் வீழ்ச்சி அடைந்த மனிதகுலத்தை மீண்டும் புனிதத்தில் நிலைநிறுத்தவே இறைமகன் இவ்வுலகிற்கு வந்தார். இயேசு கிறிஸ்து மனிதர்களின் மீது கொண்ட அன்பின் ஆழமே அவரது உயிரை நமக்காகப் பலியாக்கத் தூண்டியது. நமது மீட்புக்காக விண்ணகத்தில் இருந்து இறங்கிய அவரது அன்புக்கு பதிலன்பு செலுத்தும் காலமாக இத்தவக்காலம் அமைந்துள்ளது. நமது மனமாற்றம் மற்றும் பரிகார வாழ்வின் வழியாக இயேசு அளிக்கின்ற மீட்புக்கு நம்மைத் தகுதிப்படுத்துவோம். "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய்

இருப்பது போன்று நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48) என்னும் இயேசுவின் அழைப்பிற்கு செவிமடுத்து நடப்பதிலேயே நமது வாழ்வு புனிதம் அடைகிறது. நமது செபங்களும் நற்செயல்களும் நம்மைச் சுற்றியுள்ள அனைவரின் நல்வாழ்வுக்கும் பயனளிப்பதாக அமையட்டும். பாவங்களைக் கண்டு பயந்தோடவும், புனிதத்தில் நடைபயிலவும் இந்த தவக்காலம் உதவட்டும். கடவுளின் ஆட்சிக்கு நம்மை உட்படுத்தும் புனித காலமாக இது அமையட்டும்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### பெண்களிடமிருந்து திருஅவை இன்னும் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டும்!

இறைவேண்டல், ஆன்மிகச் சிந்தனைகள் மற்றும் செயலின் வழியாகத் திருஅவைசார் குழுமங்களின் வாழ்க்கை மற்றும் வளர்ச்சிக்குப் பெண்களின் இருப்பு மற்றும் பங்களிப்பு திருஅவையை எப்போதும் வளப்படுத்திய உண்மைகளாகும் என்றும், உண்மையில் இவை அதன் அடையாளத்தை உருவாக்குகின்றன என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஹான்ஸ் உர்ஸ் வான் பல்தாசரின் "கொள்கைகள்" பற்றிய விமர்சன மதிப்பீட்டுடன் வெளிவந்திருக்கும் Making the Church Less Masculine? என்ற நூலிற்கு எழுதியுள்ள முன்னுரையில் இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, ஆயினும்கூட, குறிப்பாக உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்பு மற்றும் கொண்டாட்டத்தின்போது, திருஅவையில் பெண்களின் குரலுக்கு நாம் போதுமான அளவு செவிசாய்க்கவில்லை என்பதையும், அவர்களிடமிருந்து திருஅவை இன்னும் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் உணர்ந்தோம் என்றும் கூறியுள்ளார்.

உண்மையில் பெண்கள் சொல்வதைக் கேட்பதன் வழியாக, எதார்த்தத்தை வேறு கோணத்தில் பார்க்கும் ஒருவரின் பேச்சைக் கேட்கிறோம் என்றும், அதனால் நமது திட்டங்களையும் முன்னுரிமைகளையும் மறுபரிசீலனை செய்ய வழிவகுக்கிறோம் என்றும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் சில வேளைகளில் நாம் கேட்பது மிகவும் புதியது மற்றும் நமது சிந்தனை முறையிலிருந்து வேறுபட்டது மற்றும் பார்ப்பது அபத்தமானது என்று தோன்றுகிறது, மேலும் இதுகுறித்து நாம் அச்சமடைகின்றோம், என்றாலும் இந்தத் திகைப்பு நலமானதுதான் என்றும் அது நம்மை வளரச் செய்கிறது என்றும் கூறியுள்ளார். ஒருவருக்கொருவர் உண்மையிலேயே கற்றுக்கொள்வதற்கும், வேறுபாடுகள் நிறைந்த ஆனால் ஒன்றித்துப் பயணிப்பதற்கும் ஒரே கடவுளின் மக்களாக முன்னேறுவதற்கும் பொறுமை, ஒருவருக்கொருவர்மீது மரியாதை, செவிசாய்த்தல் மற்றும் திறந்த மனப்பான்மை ஆகியவை தேவைப்படுகிறது என்றும் எடுத்துக்காட்டியுள்ளார்.

### மனிதகுலத்திற்கான நல்ல பணியாளர்கள் பொதுப்பணியாற்றுபவர்கள்

பொதுநன்மைக்காக உழைக்கும் பணியாளர்கள் அனைவரும், மனித குலத்திற்கான நல்ல பணியாளர்கள், சமூகத்தில் அமைதியை உருவாக்குபவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள் என்றும், தேவையில் இருப்பவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என அனைவரையும் காக்கும் பொறுப்பு கொண்டவர்கள் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். வத்திக்கான் பொது பாதுகாப்பிற்கான ஊழியர்கள் மற்றும் மேலாளர்களைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவர்களின் அர்ப்பணிப்புள்ள பணிக்காகத் தன் நன்றியினையும் தெரிவித்தார். வத்திக்கானுக்கு வரும் திருப்பயணிகள், சுற்றுலாப்பயணிகள் என அனைவருக்கும் அமைதியான சூழலையும் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பையும் வழங்குவதற்காக, சிறப்பாக செயல்படும் அவர்களின் பணி பாராட்டிற்குரியது என்றும், திருத்தந்தையின் உரோம் மற்றும் இத்தாலிய பயணங்களின்போது அதற்கேற்றவாறு தங்கள் பணியின் காலஅட்டவணையை மாற்றிக்கொள்ளும் அவர்களின் செயலுக்காகவும் நன்றி தெரிவித்தார்.

### வழிபாட்டு சீர்திருத்தம் இல்லாமல் திருஅவை சீர்திருத்தம் இல்லை!

உங்களின் இந்த அர்ப்பணிப்பில் தொடர்ந்து ஈடுபடுமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன், இதனால் மக்களை வழிபாட்டுக் கொண்டாட்டத்தின் பயனுள்ள நல்வாழ்விற்கு எவ்வாறு வழிநடத்துவது என்பதை மேய்ப்பர்கள் அறிவார்கள் என்றும், அங்கு இறந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் அறிவிப்பு அவரது வாழ்க்கையை மாற்றும் இருப்பின் உறுதியான அனுபவமாக மாறும் என்றும் உரைத்தார். தெய்வீக வழிபாடு மற்றும் சடங்குகளின் ஒழுங்குமுறை திருப்பீடத்துறையின் ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்தின் பங்கேற்பாளர்களை சந்தித்தபோது இவ்வாறு உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்துவுடன் புதுப்பிக்கப்பட்ட ஒரு சந்திப்பு இல்லாமல் திருஅவையில் சீர்திருத்தம் சாத்தியமில்லை என்றும் கூறினார். உள்விதிமுறை அமைப்பின் (Constitution) முதல் எண்கள் வியக்கத்தக்க வகையில் சுருக்கமாகக் கூறுவது போல, இறையியல் அர்த்தத்தில் வழிபாடு என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டால் மட்டுமே, 'வழிபாட்டு சீர்த்திருத்தம் இல்லாமல் திருஅவை சீர்திருத்தம் இல்லை' என்றதொரு அறிக்கையை வெளியிட முடியும் என்று தெரிவித்தார் திருத்தந்தை.

### மனித வர்த்தகத்திற்கு எதிராக ஒன்றுபடுவோம்!

புனித பகிதாவின் நினைவு நாளில், பொய்யான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டு, பின்னர் சுரண்டல் மற்றும் முறைகேட்டிற்கு ஆளாகியுள்ள நமது பல சகோதரர் சகோதரிகளை நினைவு கூர்வோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மனித வர்த்தகத்திற்கு எதிராக இறைவேண்டல்

செய்யுங்கள் என்று ஹேஷ் டாக்குடன் வெளியிட்டுள்ள டுவிட்டர் குறுஞ்செய்தி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனித வர்த்தகம் என்ற வியத்தகு உலகளாவிய நிகழ்வை எதிர்த்துப் போராட நாம் ஒன்றுபடுவோம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். உலகளவில் 2 கோடியே 76 இலட்சம் பேர் இந்த மனித வர்த்தகத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். மனித வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர் எல்லா வயதினரையும், நாட்டவரையும் கடத்துகின்றனர். மேலும் அவர்களை தங்களின் சொந்த இலாபத்திற்காக சுரண்டுகிறார்கள்.

## சுடர் வாசகர் போட்டி - 106

1. புனித பேசில்
2. ஏலி
3. சலேசிய சபையைச் சார்ந்தவர்
4. உலக ஈடுபாடுகளில் பற்றின்மை, பொதுநலம்
5. டோமினிக் சாவியோ
6. ஒரு பீப்பாய் நிறைய புளித்த காடியை வைத்தாலும் ஈக்களை ஈர்க்காது. ஆனால் ஒரு கரண்டித் தேன் பல ஈக்களை ஈர்க்க முடியும் என்பது
7. 350 ஆண்டுகள்
8. கத்தாசியா
9. கஸ்பார், மெல்காயர், பல்தசார்
10. தொழுநோயால்
11. ஜோஸ்டொமிகோ மற்றும் மெர்சிடியஸ்
12. திருத்தந்தை 23ம் அருளப்பர்
13. புனித பவுல்
14. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் படைத் திருப்பணியாளர்களில் சிறப்பாக சேவை செய்வோருக்கு அளிக்கப்படும் விருது
15. ஏழை நோயாளிகளுக்கான மருத்துவமனை

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. Maria Santhosh, Coimbatore

Mrs. Jacquline Mary, Tricy

Mr. Antonysamy, Chennai

## சுடர் வாசகர் போட்டி 108

1. "மனித வர்த்தகத்திற்கு எதிராக இறைவேண்டல் செய்யுங்கள்" கூறியது யார்?
2. "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போன்று .......................இருங்கள்"
3. தவக்காலத்தில் கொண்டாடப்படும் பெருவிழா எது?
4. இயேசுவின் உயிர்ப்புக்கு முக்கிய சாட்சியம் கூறுவதாக யோவான் யாரை குறிப்பிடுகின்றார்?
5. வெண்கலப் பாம்பை செய்து உயர்த்தியவர் யார்?
6. குருத்தோலை ஞாயிறு அன்று இயேசு தனது பவனியை எங்கிருந்து துவங்கி எங்கே நுழைகிறார்?
7. சிலுவை வழி சிகரத்தை தொட்டவர் யார்?
8. திருவிவிலியத்தில் புனித யோசேப்பு பற்றி எத்தனை இடங்களில் குறிப்பு உள்ளன?
9. எரேமியா வழியாக ஆண்டவர் சட்டத்தை எங்கே பதிப்பதாக கூறுகிறார்?
10. புனித லீமா ரோஸ் யாரிடம் உறுதிபூசுதல் பெற்றார்?
11. நற்செய்தியாளர் யோவான் அடிக்கடி பயன்படுத்திய இரண்டு வார்த்தைகள் என்ன?
12. முதல் மூன்று கட்டளைகள் நம்மை எதற்கு அழைக்கின்றது?
13. மனித குலத்திற்கான நல்ல பணியாளர்கள் யார் என்று திருத்தந்தை கூறுகிறார்?
14. நெற்றியில் பூசப்படும் விபூதி எதற்கு அழைப்பாக அமைகிறது?
15. குருத்தோலை ஞாயிறன்று இயேசு எதன்மீது பவனி சென்றார்?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| தீபகம் | பெயர்: ................................. |
| தொன்போஸ்கோ மறைப்பணி மையம் | முகவரி: ................................. |
| 45, லேண்டன்ஸ் சாலை | .................................. |
| கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010. | .................................. |
| தொலைப்பேசி: 044 - 26428162. | .............................. |

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

இறை இரக்கத்தின் ஞாயிறு

ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா

புனித ஸ்தனிஸ்லாஸ்

புனித முதலாம் மார்ட்டின்

பாஸ்கா காலம் மூன்றாம் ஞாயிறு

இறையழைத்தல் மற்றும் பாஸ்கா காலம் நான்காம் ஞாயிறு

புனித ஜார்ஜ், அடால்பெர்ட்

சிக்மரிங்கன் நகர்ப் புனித பிதேலிஸ்

புனித மாற்கு நற்செய்தியாளர் பெருவிழா

பாஸ்கா காலம் ஐந்தாம் ஞாயிறு

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

ஆண்டவரின் பிறப்பு நமக்குத் தரும் சிறப்பு

இறை இரக்கத்தின் வலிமை - மனித வாழ்வின் வலிமை

திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**


இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மார்ச் 15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# மார்ச் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | | தொ.நூ. 37:3-4,12-13,17-28 | மத். 21:33-43,45-46 |
| 2 | ச | | மீக். 7: 14-15,18-20 | லூக். 15: 1-3,11-32 |
| 3 | **ஞா** | **பொதுக்காலம் 5ம் ஞாயிறு** | **I.** வி.ப. 20: 1-17<br>**II.** 1கொரி. 1: 22-25 | லூக். 2: 13-25 |
| 4 | தி | புனித கசிமீர் | 2அர. 5: 1-15 | லூக். 4: 24-30 |
| 5 | செ | | தானி. 1: 2,11-19 | மத். 18: 21-35 |
| 6 | பு | | இச. 4: 1,5-9 | மத். 5: 17-19 |
| 7 | வி | புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி | எரே. 7: 23-28 | லூக். 11: 14-23 |
| 8 | வெ | இறைவனின் புனித ஜான் | ஓசே. 14: 1-9 | மாற்கு 12: 28-34 |
| 9 | ச | உரோமை நகர்ப் புனித பிரான்செஸ் | ஓசே. 6: 1-6 | லூக். 18: 9-14 |
| 10 | **ஞா** | **பொதுக்காலம் 6ம் ஞாயிறு** | **I.** 2குறி. 36: 14-16,19-23<br>**II.** எபே. 2: 4-10 | யோவா. 3: 14-21 |
| 11 | தி | | எசா. 65: 17-21 | யோனா. 4: 43-54 |
| 12 | செ | | எசேக். 47: 1-9, 12 | யோவா. 5: 1-3, 5-16 |
| 13 | | | எசா. 49: 8-15 | யோவா. 5: 17-30 |
| 14 | வி | | விப. 32: 7-14 | யோவா. 5: 31-47 |
| 15 | வெ | | சா.ஞா. 2:,12-22 | யோவா. 7:12,10,25-30 |
| 16 | ச | | எரே. 11: 18-20 | யோவா. 7: 40-53 |
| 17 | **ஞா** | **தவக்காலத்தின் முதல் ஞாயிறு** | **I.** எரே. 31: 31-34<br>**II.** எபேசி. 5: 7-9 | யோவா. 12: 20-33 |
| 18 | தி | எருசலேம் நகர்ப் புனித சிரில் | தானி.2:1-9,15-17,19-30,33-62 | யோவா. 8: 1-11 |
| 19 | **செ** | **புனித யோசேப்பு: புனித கன்னி மரியாவின் கணவர் பெருவிழா** | **I.** 2சாமு. 7: 4-5,12-14.16<br>**II.** உரோ. 4: 16,18-210741 | லூக். 2: 41-51 |
| 20 | பு | | தானி.3:14-20,24-25,26 | யோவா. 8: 31-42 |
| 21 | வி | | தொ.நூ. 17: 3-9 | யோவா. 8: 51-59 |
| 22 | வெ | | எரே. 20: 10-13 | யோவா. 10: 31-42 |
| 23 | ச | புனித மாங்க்ரோவேகோ துரிபியுஸ் | எசே. 37: 21-28 | யோவா. 11: 45-57 |
| 24 | **ஞா** | **ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு** | **I.** எசா. 50: 4-7<br>**II.** பிலி. 2: 6-11 | மத். 26: 14-27: 66 |
| 25 | தி | | எசா. 42: 1-7 | யோவா. 12: 1-11 |
| 26 | செ | | எசா. 49: 1-6 | யோவா.13:21-33,36-38 |
| 27 | பு | | எசா. 50: 4-9 | மத். 26: 14-25 |
| 28 | வி | ஆண்டவரின் இரவு விருந்து | வி.ப. 12: 1-8,11-14<br>1கொரி. 11: 23-26 | யோவா. 12: 1-15 |
| 29 | வெ | ஆண்டவரின் பாடுகளின் வெள்ளி | எசா. 52: 13-53,12<br>எபி. 4: 14-16,5:7-9 | யோவா. 18 :1-19:42 |
| 30 | ச | **புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு** | | |
| 31 | **ஞா** | **ஆண்டவரின் உயிர்ப்பு ஞாயிறு** | தி.ப. 10: 34, 37-43<br>1கொலோ. 3: 1-4 | யோவா. 20: 1-9 |


TO SHARE THE LIGHT
தீபகம் - தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்
இன்றும்
கல்வாரி
தவக்கால சிறப்பு ஒலி-ஒளி நிகழ்ச்சி
தவக்காலத்திலே
இறை இயேசுவின்
பாடுகளை
இணைந்து சிந்திக்க
ஒரு முயற்சி
உங்கள் பங்குகளில் அரங்கேறத் தொடர்பு கொள்க :
இயக்குநர்-தீபகம் : அருட்பணி. ஜேசுதாஸ் ச.ச +91 9385201453


தீபகம் தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்
சிறப்பு தவக்கால
சிலுவைப் பாதை
புத்தகங்கள் (தமிழ் - ஆங்கிலம்)
சிலுவையோடு
நடக்க... வாழ... வழிநடத்த...
ஐந்து பாதைகள்
TAKE UP YOUR CROSS AND follow me
- Luke 9:23
SR. SARAL SCB
FOLLOW ME
DEEPAGAM
ஆசிரியர் : புல்லோன் ஜோ லூயிஸ்
Editor: Sr. SARAL SCB
சிறுவர்கள், துறவிகள், குடும்பங்கள், இளையோர் என அனைவருக்கும் ஏற்ற வகையில்
சிந்தனைகள் கொண்ட சிலுவைப் பாதை புத்தகம் கிடைக்கும்.



# சிலுவையை கொண்டாடுவோம்

TO SHARE THE LIGHT

**தீபகம்** – தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

அன்பு நண்பர்களே, **தீபகம்** மேற்கொள்ளும் அனைத்து இறைப்பணிக்காகவும் உங்கள் தாராள நன்கொடைகளை இந்த QR கோடை ஸ்கேன் செய்து இதன் மூலம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

013805300007612@SIBL0000138
SISS A/C DEEPAGAM
THE CITADEL, 45, Landons Road
Kilpauk, Chennai - 600010

www.upiqrcode.com

www.upiqrcode.com
www.upiqrcode.com
www.upiqrcode.com

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 deepagamdonbosco

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா**, கீழ்ப்பாக்கம், சென்னை - 10